Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் – 16

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—13 23—29 மே 2003





## தொடரும் மறியல்கள்

## நிறைவேறாத புனரமைப்புகள்



## வரலாறு தந்த துயரம்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி
23.05.2003

# நம்பிக்கை இழந்த நம்பியார்

"நீங்கள் ஒருவரை வா என்று அழைத்துவிட்டு அவரை நோகடிக்கின்றீகள். இலங்கை அரசியலின் போக்கு இதுதான் என்றால் இலங்கையில் சமாதான முயற்சிகளில் இனிப்பங்களிப்புச் செய்வது குறித்து நான் மீள் பரிசீலனை செய்வதை விடவும் எனக்கு வேறுவழியில்லை...."

இது யாருடைய 'புலம்பல்' என்று நினைக்கிறீர்களா? வேறு யாருடையதுமல்ல. அதியுயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு சிறிலங்கா அரசால் சிறப்பு ஆலோசகராக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட, அந்த அச்சமூட்டிய அறிக்கைக்குரியவரான ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியான லெப்ரினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார் தான்.

இதனை அவர் சிறிலங்காவில் வைத்து கூறியிருப்பாரேயானால் இது இன்னமும் அழுத்தமும் அர்த்தமும் கொண்டதாக இருந்திருக்கும். அவர் இதை புதுடில்லி போய் நின்றல்லவா புலம்பியுள்ளார்.

இருந்தாலும் அவர் அங்கு நின்றாவது அதைக் கூறினாரே அதற்காகப் பாராட்டலாம்...

அவர் தனது இக்கூற்றின் மூலம் இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒன்று 'சிறிலங்கா அரசின் வா' என்று அழைத்துவிட்டு நோகடிக்கும் பண்பு. இது குறித்து நம்பியார் சிறிலங்காவுக்கு சமாதான நகர்வுகளுள் ஒரு சிக்கலான மனிதஉரிமைகளுடன் கூடிய பிரச்சினைக்கு தீர்வுகாணுதல் அல்லது ஆலோசனை கூறுதல் தொடர்பாகத் தன்னை பிணைத்துக் கொள்வதற்கு வருகைதருமுன்னரே மிகவும் ஆழமாகவும், அவதானமாகவும் யோசித்திருக்க வேண்டும்.

கடந்த கால வரலாறுகளை நினைவில் கொண்டுவந்து பார்த்திருக்க வேண்டும். அப்படிப்பார்த்திருந்தால் தாம் எத்தகையதோர் நாட்டிற்கு, எப்படிப்பட்டவர்கள் அழைத்து, எத்தகைய பிரச்சினைக்கு ஆலோசனை கூறுமாறு, எவ்வாறான தொரு கட்டத்தில் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அவர் புரிந்து கொண்டிருப்பார். அப்படிப் புரிந்து கொண்டு செயற்பட்டிருந்தால் இவ்வாறாக புலம்பும் நிலை ஏற்பட்டிருக்காது.... உதாரணமாக இப்படித்தான் 1987இல் அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி சிறிலங்காவில் சமாதான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள சிறிலங்காவுக்கு வருகை தந்த போது அவருக்கு அளிக்கப்பட்ட இராணுவ அணிவகுப்பு மரியாதையின் போது ஒரு கடற்படைச்சிப்பாய் துப்பாக்கிப் பிடியால் அவரது பிடரிப்பகுதியில் தாக்கிக் கொல்ல முயன்றவேளையில் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இச்சம்பவம் நடந்தபோது அப்போதைய சிறிலங்காவின் சனாதிபதியாக இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் அருகேதான் நின்றிருந்தார்.

நாட்டிற்கு அவமானம் தரும் அந்த நிகழ்வை வெகுஇயல்பாக எடுத்துக்கொண்டு அந்த நிகழ்வை அது ஒரு 'sun strok' கால் நடைபெற்ற அசம்பாவிதம் எனக் கூறி மழுப்பியது வரலாறு.

இது ஒன்றேபோதும் சிறிலங்காவின் அரசியல்- இராணுவ பொறுப்புணர்வின் தன்மையினை தெளிவாக உணர்த்துவதற்கு. இந்த நிலையில் நம்பியாருக்கு ஏற்பட்ட அனுபவம் எத்தகையது என்பதை அவர் வெளிப்படையாக பின்வருமாறு கூறுகிறார்.

'என்னை முன்னிலைப்படுத்தி எனக்கு எதிரான அரசியல் வாதிகள் செய்த கண்டன விமர்சனங்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன. என்னை மனக்கிலேசமடைய வைத்துள்ளதுடன் எனது சுய கௌவரத்தையும் பாதிப்பதாக உள்ளது.'

நம்பியார் இப்படிப் புலம்பும் நிலைக்கு வருவதற்கு நிச்சயமாக அவரின் தவறுகளே காரணமாகும். இன்றைய சிறிலங்கா தொடர்பான பிரச்சினைகளில் இந்தியாவும் இந்திய அரசியல் வாதிகளும் இந்த ஊடகங்களும் தவறான கணிப்பீடுகளையும், தவறான அணுகுமுறைக் கொள்கைகளையும் கொண்டதாக இருப்பதானது இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு ஏற்றதல்ல என்பதற்கு நம்பியாரின் அனுபவமும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

குறிப்பாக இந்திய அரசும், அரசியல்வாதிகளும், கொள்கை வகுப்பாளர்களும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமது அபிப்பிராயங்களை மீள் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் என்றுமில்லாதவாறு இப்போது ஏற்பட்டுள்ளது.

தன்னை அகௌரவப்படுத்தும் சிறிலங்கா அரசிற்கு ஆலோசனை கூறுவதை மீள் பரிசீலனை செய்ய நம்பியார் முடிவெடுத்துள்ளமையானது மற்றொரு ஆலோசகரான ஜேக்கப் அவர்களை விழிப்புணர்வு கொள்ள வைத்தால் நல்லது. அல்லது அவரும் இப்படித்தான் புலம்பவேண்டி நேரிடும்.



## தூரனின் பார்வை

# முதன்மைத்தேவை 'நிதி'யல்ல ... 'நீதி' மட்டுமே...

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவும் ரோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளவும் விடுதலைப் புலிகளை இணங்க வைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக இயங்கிவரும் நோர்வே நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கான அனுசரணையாளர்களும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் அமைச்சர்களும் அதிகாரிகளும், வேறெந்த நாட்டிலும் பெறாத அனுபவங்களை சிறிலங்காவில் பெற்றுவருகிறார்கள் என்பதை அவர்களின் கருத்து வெளிப்பாடுகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கம் இலங்கையில் போர் நிறுத்தப்பட்டு அமைதிநிலை உருவாக வேண்டும் என்பது தான் என்று வெளிப்படையாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதிலும், இதற்குள் பல்வேறு பட்ட தேசிய மற்றும் சர்வதேச நீதியிலான, பல்வேறு நோக்கங்களும் காரணிகளும் இருக்கின்றதை அரசியல் ஆய்வாளர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமாதானத்தின் அவசியம் மற்றும் அமைதிநிலையின் தேவை ஆகியன குறித்து எவருக்கும் முரண்பாடான கருத்துக்கள் இருக்கப்போவதில்லை.

ஆனால் அவற்றை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலோபாயங்களும், தந்திரோபாயங்களும் தான் சமாதான நகர்வுகள் மீதான சந்தேகங்களையும், உடன்பாடுகாண இயலாத சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றன.

உள்நோக்கில் ஒன்றை இலக்கு வைத்துக் கொண்டு புற நோக்கில், 'சமாதானம்' மற்றும் அமைதி குறித்து வெறுமனே நாடகமாகச் சென்று சம்பிரதாய பூர்வமாக 'அரசியல்' புன்னகைகளைப் பரிமாறி, கைகுலுக்கி, மேசையில் அமர்ந்து பேசி, விருந்துண்டு, ஊடகங்களுக்கு 'பிரச்சினைகள் இருந்தாலும் பேச்சுக்கள் சுமுகமாகவும், சிநேகபூர்வமாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைந்துள்ளன' என அரசியல்வழமையின் அடிப்படையில் அறிக்கை விடுவதன் மூலம், கைதட்டி திருப்திகொண்டு, தேசியரீதியில் மக்களை நம்பவைக்க சிறிலங்கா அரசும், சர்வதேசத்தை நம்பவைக்க சமாதான அநுசரணையாளர்களும், அவர்களுக்குத் துணையாக நிற்கும் நாடுகளும் தொடர்ந்தும் இதே நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்...

ஆனால் விடுதலைப் புலிகளால் அவ்வாறு தமிழ் மக்களை வரட்டுத்தனமான, மேம்போக்கான, உத்தரவாதமும் உறுதியும் அற்ற நம்பிக்கைகளுக்கு ஆட்படுத்த முடியாது, ஆட்படுத்தவும் மாட்டார்கள்.

அவர்கள் தமது மக்களின் மண்ணின் விடுதலைக்காக, முழுமையான சுதந்திரத்திற்காக, அவர்கள் மீதான, சிங்களப் பேரினவாதத்தாலும் ஏனைய ஆக்கிரமிப்புச் சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்டுவந்த சகல அடக்குமுறை ஒடுக்குமுறை நடவடிக்கைகளிலிருந்தும் மீள்வதற்காக ஒரு வீரமும் தியாகமும் நிறைந்த போராட்டத்தை கடந்த இரு தசாப்தத்திற்கும் மேலாக வெற்றிகரமாக மேற்கொண்டு தமது இலக்கினை எட்டும் தறுவாயில், சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளிற்கிணங்க சமாதான வழிமுறைகள் மூலம் ஒரு உறுதியான, நிரந்தரமான அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்வந்தவர்கள்.

இதன் மூலம் சர்வதேச சமூகத்தின் மீதான தமது நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தியவர்கள்.

சுயமாகவே போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு சமாதான வழிமுறைகளுக்கு பாதைவகுத்துக் கொடுத்தவர்கள்.

இதேவேளை தமது மக்கள் சமாதானத்தின் மீதும், அமைதியின் மீதும் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதிகள், அவர்கள் சிறிலங்கா அரசும் வேறுசில சக்திகளும் கூறுவதைப் போன்றோ 'சுய அரசியல் அபிலாசை நோக்கில் பிரச்சாரம் செய்ததைப் போன்றோ பயங்கரவாதிகள்' அல்லர் எனவும் நிரூபித்தார்கள். ஆனாலும் எமது மக்கள் சமாதானத்தின் பேரால் ஏமாளிகள் ஆக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகவும் திடமான உறுதிப்பாடு கொண்டவர்களாகவும் உள்ளனர் என்பதே இங்குமுக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

'பேச்சுவார்த்தை' நகர்வுகள் யாவும் எமது மக்களின் விடிவை இலக்கு வைத்ததாக, அவர்களுக்கு அவர்களின் பாரம்பரியத் தாயக மண்ணில் தமது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களின் தனித்துவத்தைப் பாதுகாத்து, எவ்வித அடக்குமுறை ஒடுக்குமுறை அச்சமுமின்றி, தமது இயல்பு வாழ்வினை இயல்பாக அனைத்து மனித உரிமைகளுடனும், வாழ்வியல் உத்தரவாதங்களுடனும் வாழ்வதற்கான உறுதியான அரசியல் தளத்தை சட்டபூர்வமாகப் பெற்றுக் கொடுப்பதற்கான விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்கும்

(15ம்பக்கம் பார்க்க...)

# மதவடி மயிலர்



செய்தி:- அபிவிருத்தி லொத்தர் விவகாரம் தொடர்பாக பிரதமரின் கருத்துக்களை சனாதிபதி நிராகரித்தார்....

*மயிலர்:- இந்த 'லொத்தர்' சபை இழுபறியில் அதிர்ஷ்டம் யார் பக்கம் இருக்கிறது என்று பாப்பம்... ஆனால் ... இது நாட்டின் 'அபிவிருத்தி' க்கு ஏற்றதாக இல்லைப் பாருங்கோ... இதிலை அதிஷ்டம் யாருக்கு விழுந்தாலும்... நட்டம் சிறிலங்காவுக்குத்தான்...*

செய்தி:- பேதங்களை மறந்து பணியாற்ற சனாதிபதியும் பிரதமரும் முன்வரவேண்டும் என கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் வேண்டுகோள்.

*மயிலர்:- இது போதனைகளால் தீர்க்கமுடியாத பேதமைகளின் செயற்பாடு பாருங்கோ... விடிய விடிய இராமர்கதை.... விடிஞ்ச பிறகு இராம இராவணன் சண்டைக்கு என்ன காரணம் என்றால்... இவர் அவரையும்... அவர் இவரையும் குற்றம்சாட்டுகிற கதையாத்தான் இருக்கும் பாருங்கோ... கல்லுக்கு சொல்லால் உபதேசம் பண்ணேலாது...*

செய்தி:- எவ்வகையான தடைகள் வந்தாலும் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்கிறார் சனாதிபதி...

*மயிலர்:- முட்டுக்கட்டை போடுகிறதே அம்மணிதான். இந்தப் பொட்டுக்கேட்டை ஆரிட்டைப் போய்ச் சொல்லுறதாம்... தடைக் கட்டை சில்லுக்கு வைச்சுவிட்டு... தேரை இழுங்கோ இழுங்கோ என்றால்.... 'அரோகரா' கோஷம் மட்டும் தான் மிஞ்சும் பாருங்கோ...*

அறிவு, பழங்காலத்தின் சாரம், ஆனால் அழகு, எதிர்காலம் விடும் அழைப்பு. - ஆலிவர் வெண்டெல் ஹோம்ஸ்

# தர்மத்தின் வழி சமாதானம் அல்லது மகேஸ்வர பூசை

நிலாந்தன்

"நாவலருக்குப்பின் யாழ்ப்பாணத்தில் சைவத்துக்கு அதிகம் தொண்டாற்றியது தேவானந்தாதான்'' என்று ஒரு யாழ்ப்பாணத்தவர் வேடிக்கையாகச் சொன்னார்.

ஆனால், அண்மைக்காலங்களில் தேவானந்தாவின் இந்தச்சா தனையை இந்து சமயக் கலாசார அமைச்சர் முறியடித்து விடுவார் போலத்தோன்றுகிறது.

நாடு முழுவதும் அவர் நடாத்திவரும் மகேஸ்வர பூசை - ஆம் அதை அப்படித் தான் அழைக்க வேண்டும். - கோயில்களை மையமாக வைத்து அவருடைய செல் வாக்கு வலயத்தை விரிவுபடுத்தும் ஒரு மெகா முயற்சியே.

கடந்த 15 மாத கால சமாதான முயற்சிகள் ஊசலாடிக்கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், ரோக்கியோ மாநாட்டுக்கு புலிகள் போவார்களா இல்லையா என்ற நிச்சயமின்மைகள் ஒரு புறம், இன்னொரு புறம் நம்பியாரின் அறிக்கை கொண்டு வந்திருக்கும் சர்ச்சைகள்.

இவை தவிர கொழும்பில் ரணிலுக்கு எதிராக சந்திரிகா திறந்திருக்கும் ஒரு புதிய போர்முனை.

இவை எல்லாவற்றினதும் மத்தியில் இவை எதனாலும் பாதிக்கப்படாமலேயே மகேஸ்வர பூசை தொடர்கிறது.

புலிகள் மானுடத்தின் ஒன்றுகூடல் செய்கிறார்கள்.

முஸ்லிம்களும் மாநாடுகள் செய்கிறார்கள்.

கம்பன் கழகம் இசை விழா செய்கிறது.

திருமறைக்கலாமன்றமும் விழாக்கள் எடுக்கிறது.

நாமும் எதையாவது செய்தாக வேண்டும் என்று அந்த அமைச்சர் புறப்பட்டுவிட்டார் போலத் தெரிகிறது.

இதில் ஒன்றை முதலில் தெளிவுபடுத்தவேண்டும். யாரும் தமது மதத்தை பின்பற்றுவதற்குள்ள உரிமைபற்றியோ, அல்லது தமது மதத்துக்காக மாநாடு செய்வதற்குள்ள உரிமைபற்றியோ இப்பத்தி கேள்வி எழுப்பவில்லை.

யாருடைய மத நம்பிக்கைகளையும் தாக்குவது இப்பத்தியின் நோக்கமல்ல.

மாறாக ஊசலாடிக்கொண்டிருக்கும் சமாதானச்சூழலில் ஒரு அமைச்சர் சனங்களை மனோவசியம் செய்வதற்கு மதத்தையும் கோயில்களையும் நம்பிக்கைகளையும் பாவிப்பதன் பின்னால் இருக்கும் அரசியல் பற்றியே இப்பத்தி இங்கு கேள்வி எழுப்புகிறது.

அதுவும் சமாதானமுயற்சிகளை நிச்சயமின்மைகள் சூழ்ந்து வரும் இந் நாட்களில் இப்படியொரு மகேஸ்வர பூசைக்கான தேவைதான் என்ன?

அதிலும் குறிப்பாக இந்துக்களின் வழிபாட்டிடங்கள் பல, உயர்பாதுகாப்பு வலயங்களுட்சிக்குண்டிருக்கும் ஒரு பின்னணியில் அவற்றை மீட்பது பற்றிய எந்தக்கவலைகளும் இன்றிக்காணப்படும் ஓர் அரசில் அமைச்சராய் இருப்பவர் இப்படி விழா எடுப்பதை எப்படி விளங்கிக் கொள்வது?

உதாரணமாக, கீரிமலைக்கு நினைத்தபடி போகமுடியாது. கேதீஸ்வரம் ஒரு உயர் பாதுகாப்பு வலயம். அங்கே கமரா கொண்டு போகமுடியாது.

நம்பியாரின் அறிக்கைப்படி, ஆகக் கடைசியாக விவாதிக்கப் படவேண்டிய உயர் பாதுகாப்பு வலயங்களில் ஒன்றுக்குள்ளேயே நகுலேஸ்வரம்- கீரிமலை- இருக்கிறது,

இந்த லட்சணத்தில் அகதிகளாய் இருப்பவர்களின் குடியேறும் உரிமையை மறுத்துவிட்டு வழிபாட்டு உரிமை பற்றி கதைப்பது என்பது எந்த வகை அரசியல்?

இதெல்லாம் தொடங்கியது 96 இல் ரிவிரச இரண்டோடு புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பிறகுதான்.

புலிகளின் வெளியேற்றத்தையடுத்து அங்கு உண்டாகிய அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்ப முயன்ற எவருமே மதத்தையும் அரசியலையும் சலுகைகளையும் அரசியலையும் கலந்தே பாவித்தார்கள். அதைத்தவிர வேறு எந்த வகை அரசியலையும் நடாத்த அவர்களால் முடியவில்லை என்பதே யதார்த்தம்.

கோயில்களைப் பராமரிப்பதன் மூலம் சாதாரண சனங்களை மனோவசியம் செய்து விடலாம் என்று அவர்கள் நம்பினார்கள். இப்பொழுதும் நம்புகிறார்கள்.

சைவ சமயத்தின் இப்புதிய "எழுச்சி"யோடு சேர்ந்து இன்னொரு கலாசாரம் - முகத்துதிக்கலாசாரம் யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

உதவி செய்த அமைச்சரை புகழ்ந்து போற்றும் விளம்பரங்கள் அமைச்சரின் நிழற்படங்களோடு பத்திரிகைகளில் அடிக்கடி வரும். இதைக் குறிப்பிட்ட அமைச்சரே மறைமுகமாக ஊக்குவிப்பதாக கூறப்படுகிறது.

இந்த முகத்துதிப்பண்பாட்டின் உச்சமே இப்பொழுது மாநாடு காண்கிறது.

பொருளாதார அர்த்தத்தில் கோயில்கள் இன்னமும் பொலிவிழந்து விடவில்லை என்பதை இங்கே கவனத்தில்கொள்ள வேண்டும்.

அநேகமாக எல்லாக் கோயில்களும் அதனதன் அளவுக்கேற்ப நிதிமையங்களாகவே காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ் புலப்பெயர்ச்சியோடு ஒரு தொகுதி கோயில்கள் விரைவாக சமஸ்கிரத மயப் பட்டுவிட்டன.

இப்படிஇந்த நிதியும் அதிகாரமும் ஒன்றை மற்றது அனுசரித்துப் போவது எப்பொழுதும் நடக்குமொன்று.

ஆனால் அதிஸ்டவசமாக ஈழத்துச் சைவத்தமிழ்ப் பண்பாட்டில் இப்படியொரு போக்கு என்றைக்குமே பலமானதாக அல்லது தீர்மானகரமானதாக இருந்ததில்லை.

மதத்தையும் அரசியலையும் இப்படியாகக் கலப்பது என்பது முஸ்லிம்களுக்குப் பொருந்தும், சீக்கியர்களுக்குப் பொருந்தும், பெருமளவுக்கு சிங்களவர்களுக்கும்பொருந்தும்.

ஆனால் ஈழத்துச் சைவப்பாரம்பரியத்தில் இதற்கான தடயங்கள் மிகக்குறைவே. இந்நிலையில் சைவத்தையும் தமிழ் அரசியலையும் கலக்கும் முயற்சிகள் அதிகம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகஅரிதே.

பெருமளவு இந்துக்களைக் கொண்ட யாழ்ப்பாணம் ஒரு தென்னிந்திய திருச்சபைக் காரரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை தந்தை என்று மதிக்கும் அளவுக்கு பக்குவமுடைய முதிர்ச்சிமிக்க ஒரு சமூகமாய் இருந்தது என்பதை இங்கே நினைவு கூரவேண்டும்.

எனவே இத்தகைய ஒரு பகைப் புலத்தில், அதுவும் இவ்வளவு விலை கொடுத்த பிறகு கோயில்களை மையமாக வைத்து அரசியல் நடத்திச் சனங்களை மனோவசியம் செய்ய முயல்வது என்பது, படையினரின் பிடியில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் நிலவும் அரசியல் தலைமை த்துவ வெற்றிடத்தைப் பிழையாக இட்டு நிரப்பும் ஒரு முயற்சியே.

அதோடு தமிழ்ச்சனங்களின் புத்திசாலித்தனத்தை குறைத்து மதிப்பிட்டதன் விளைவே.

முக்கியமாக,நிலைமையின் பயங்கரத்தில் இருந்து சனங்களை திசை திருப்பும் ஒரு முயற்சியே.

கடந்த 15 மாதகால சமாதானம் தமிழர்களை வெறும் பார்வையாளர்களாகவே வைத்திருக்கப்பார்க்கிறது.

மகேஸ்வர பூசையும் அதைத்தான் செய்கிறது.

ரோக்கியோ மாநாட்டில் இருந்தும் நம்பியாரின் அறிக்கையில் இருந்தும் கொழும்பின் அரசியல் கொந்தளிப்பில் இருந்தும் சனங்களை திசை திருப்பி மயக்கி வைத்திருப்பதா மகேஸ்வர பூசையின் நோக்கமும்?

அப்படிப்பார்த்தால் சமாதான காலக் கார்ணிவெல்களில் இதுவும் ஒன்றா?

மதமும் அரசியலும் கலப்பதால் வரக்கூடிய ஆபத்துக்களை உலகம் அதிக மதிகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு காலச்சூழலில், ஈழத்துச் சைவர்களுக்கு இப்படிப் புதிய பாதுகாவலர்கள் தோன்றியுள்ளார்கள்.

அவர்கள் சில சமயம் சைவத்தை பாதுகாத்தல் கூடும். ஆனால் சைவர்களைப் பாதுகாப்பார்களா?

செல்லையா ராஜதுரை இந்து விவகார அமைச்சராக இருந்த ஒரு அரசாங்கம் தானே அவருடைய சொந்த மாவட்டத்தில் (கிழக்கில்) தமிழர்களை வேட்டையாடியது.

கொக்கட்டிச்சோலை ஒரு தான் தோன்றீஸ்வரம் என்பதெல்லாம் இந்து சமயப்பாடப் புத்தகங்களில்தான் உண்டு. ஆனால் அரசியல் பாடப்புத்தகங்களில் கொக்கட்டிச்சோலை எனப்படுவது தமிழர்கள் வேட்டையாடப்பட்ட ஒரு தலம் என்பதாகவே பதிவாகியிருக்கிறது.

பிந்நாளில் ராஜதுரைக்கு அவருடைய விசுவாசத்தை மெச்சி மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவி வழங்கப்பட்டது.

ராஜதுரை தொடங்கிய அதே மாநாட்டை இப்பொழுது இந்த அமைச்சர் அதன் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்.

யுத்தநிறுத்தம் எல்லாவற்றுக்கும் வசதியாகிவிட்டது. எனவே மாநாடு இம்முறை மெகா ஸ்கேலில் நடக்கிறது.

கொழும்பில் இந்து மாநாடு தொடங்கிய நாள் அன்று அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

"தர்மத்தின் வழி சமாதானம்" என்பதே மாநாட்டின் தொனிப்பொருள் எனப்பட்டது.

அதில் , ரணில் மகாபாரதத்தில் இருந்து மேற்கோள் காட்டிப்பேசினார்.

"பாண்டவர்கள் முதலில் ஐந்து கிராமங்கள் கேட்டார்கள். அவைபுறக் கணிக்கப்பட்டதால் பின்னர் ஐந்து வீடுகள் கேட்டார்கள். அவையும் புறக்கணிக்கப்பட்டதால் யுத்தம் நடைபெற்றது.... மகாபாரதயுத்தம் பதினெட்டு நாட்களே நடைபெற்றது. ஆனால் இலங்கையில் யுத்தம் 20 வருடங்களாக நடைபெற்று வருகிறது...."

உண்மைதான்.ஆனால் இது இப்பொழுது இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளுக்கும் பொருந்தும்.

தமிழர்கள் முதலில் இடைக்கால நிர்வாக சபை கேட்டார்கள்.

அது நிராகரிக்கப்பட்டதால் பின்னர் கூட்டுச்செயலணிகளைக் கேட்டார்கள்.

அதுவும் நிராகரிக்கப்பட்டதால் முடிவில் உபகுழுக்களையாவது தாருங்கள் என்றார்கள்.

அதுவும் இல்லையென்றானபோது அவர்கள் பேச்சுவார்த்தைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவது என்று அறிவித்தார்கள்.

இது இப்படியே போனால் அவர்கள் சில சமயம் சமாதானத்தை நிரந்தரமாகவே முறித்துவிடுவார்களா?

அப்பொழுது அந்த அமைச்சர் ஆயுத பூசை செய்வாரா?



**பெருமளவு இந்துக்களைக் கொண்ட யாழ்ப்பாணம் ஒரு தென்னிந்திய திருச் சபைக்காரரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை தந்தை என்று மதிக்கும் அளவுக்கு பக்குவ முடைய முதிர்ச்சிமிக்க ஒரு சமூகமாய் இருந்தது என்பதை இங்கே நினைவு கூரவேண்டும்.**



# நறுக்கென...

## பாதுகாப்பாக உள்ளவர்களின் பாதுகாப்புக்குறித்து...

'வேலை நிறுத்தம் ' என்ற சொல் தொழிலாளர்கள் தமது உரிமை சார்ந்த போராட்டங்களின் போது பயன்படுத்தப்படும் நடவடிக்கைகளில் ஒன்றிற்குரியதாகும்.

ஒரு காலத்தில் தொழிற்சங்கங்களும், அவற்றிற்கு தலைமை தாங்கிய இடது சாரி அமைப்புக்களும் 'வேலை நிறுத்தம்' என்ற சொல்லை, அரசுக்கெதிரான தமது உரிமைகள் போராட்டங்களின் போது இறுதி ஆயுதமாகவே பயன்படுத்தப்படுவது வழக்கம்.

ஆனால் ஆளும் வர்க்கத்தினருடன் இடது சாரிகள் அதிகாரத்தைப் பங்கு போடத் தொடங்கியதும், பதவிகளுக்கான அரசியல் பேரங்களில் இறங்கத் தொடங்கியதும், முதலாளித்துவ அரசியல் கட்சிகளே தொழிற்சங்கங்களுக்கு 'போட்டி'யாக அமைத்து பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாட்டை அவர்கள் அறியாவண்ணமே சிதைக்கத் தொடங்கியதும் 'வேலைநிறுத்தம்' என்ற வலுமிக்க ஆயுதம் அதன் முழுமையான ஆற்றலை இழக்க ஆரம்பித்துவிட்டது.



இப்போது சிறிலங்காவின் இரட்டை ஆட்சியில் ஒரு ஆட்சியினர் மறுஆட்சியினரை அச்சுறுத்தப் பயன்படுத்தும் சொல்லாகவும் வேலைநிறுத்தம் மாறிவிட்டது பரிதாபமான விடயமே...!

'சந்திரிகாவினதும் கதிர்காமரினதும் பாதுகாப்பைக் குறைத்தால் நாடுதழுவிய வேலை நிறுத்தம் ஏற்படும் எனப் பொதுசன ஐக்கிய முன்னணியினர், ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு மிரட்டல் விடுத்துள்ளனர்.

சந்திரிகாவின் உயிருக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்பட்டால் அவரது அற்புதமான (!?) அரசியல்-வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு... அதாவது இந்த நாட்டிற்கு (சிறிலங்காவுக்கு) அரும் பெரும் சேவையாற்றிய அவருக்கு.... ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் மக்கள் அதைப்பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என எச்சரித்துள்ளனர்.

பாவம் தொழிலாளர்கள்.... ஏற்கனவே எல்லாவகையிலும் சுரண்டப்பட்டு இழி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில், தங்களின் உயிரைப் பாதுகாக்க அன்றாடம் வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் நிலையில், சந்திரிகாவையும் கதிர்காமரையும் பாதுகாக்க வேலை நிறுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்போகிறார்கள்.

சிறிலங்காவின் வரியிறுப்பாளர்களின் தயவில், அவர்களைச் சுரண்டி, கோலாகலமாக, சர்வ வல்லமையுடனும், வசதிகளுடனும் வாழ்கையை அனுபவிக்கும் தனி மனிதர்களுக்காக தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவேண்டுமாம்....

அரசுக்கெதிராகத் தங்களைக்காக்க , தங்கள் உரிமைகளை அரசிடமிருந்து வென்றெடுக்க வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்த 'பாரம்பரியம்' உடைபடப் போகின்றதா?

தம்மை அடக்கியொடுக்கு வோரை பாதுகாக்க தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வார்களா?

அதுவும் உயர்பாதுகாப்பு கட்டமைப்புக்குள் கோடிஸ்வர வாழ்க்கை வாழும் சந்திரிகாவையும், கதிர்காமரையும் மேலும் பாதுகாக்க தொழிலாளர்கள் தங்களின்.... 'கொத்தடிமைத் தன' உணர்வை மீண்டும் காட்ட முதலாளித்துவ கொள்கைகள் செத்துப்போன இடது சாரித்தொழிற்சங்கத் தலைமைகள் அவர்களை பயன்படுத்த முனைவார்களா....?

நல்ல நாடு...

நல்ல தொழிற்சங்கத் தலைமைகள்...

ஆனால். பாவம் மக்கள் ... பரிதாபம் தொழிலாளர்கள்.

## சந்திரிகா அளித்த விரு(ந்)து...

பசிவந்திடப் பத்தும் பறந்துவிடும் என்பார்கள். அது சரியான கருத்தாக இருக்கலாம். ஆனால் அரசியலிலோ, பதவிப் பசிவந்துவிட்டால் அது எல்லாவற்றையுமே பறக்கவைத்துவிடும் என்றால் அது மிக மிக உண்மையானது தான்.



அதனைக் கடைசியாக மிகத் தெளிவாக நிருபித்திருப்பவர் சிறிலங்காவின் அதிகார நாயகி சந்திரிகாதான்.

அண்மையில் ஓய்வுக்காகவோ... அல்லது வேறு எந்த நோக்கத்திற்காகவோ லண்டன் சென்றிருந்த சந்திரிகாவின் விருந்தோம்பும் பண்பு சிகரத்தையே தொட்டுவிட்டிருந்தது.

பொதுவாகவே ஆடம்பரமான விருந்து வைபவங்கள், கேளிக்கைகள், ஆட்டம்-பாட்டம்-கொண்டாட்டம் என்றால் சந்திரிகாவும் அவரது தம்பி அனுராவும் தம்மை மறந்து அதில் எப்படியெல்லம் கூத்தாடுவார்கள் என்பதை கொழும்பு பத்திரிகைகள் 'கேலி' செய்து விமர்சித்து களைத்துப் போய்விட்டன.

அது பண்டா பரம்பரையின் பாரம்பரியம் என்றாகிவிட்டது.

சரி லண்டன் சம்பவத்திற்கு வருவோம்.

1990 களின் மத்திய பகுதியில் இருந்து கிட்டத்தட்ட புதுமிலேனியத்தின் ஆரம்பவருடங்கள் வரை அசைக்கமுடியாத அதிகாரப்பலத்தைக் கொண்டிருந்த சந்திரிகாவின் கோபத்திற்கும் வெறுப்பிற்கும் அதிகம் ஆளானவர்கள் ஜே.வி.பியினரும், விடுதலைப் புலிகளும் தான்.

சந்திரிகாவுக்கும், இவ்விருதரப் பினருக்கும் இடையேயான முரண்பாடுகளும், மோதல்களும் தாயார் சிறிமா காலத்தில் இருந்தே ஆரம்பமான விடயங்களாகும்.

விடுதலைப்புலிகள் உடனான அவரது மோதல், அவர்கள் மீதான வெறுப்பு அவரது மேலாதிக்க- பேரினவாத சிந்தனையின் அடிப்படையில் ஆனதாகும்.

ஆனால் ஜே.வி.பியுடனான அவரது உறவும்- பகையும் அப்பட்டமான-கேவலமான மூன்றாம்தர 'சுய' அரசியல்லாபங்களை இலக்காகக் கொண்டதாகும்.

தனது கணவன் விஜய குமாரணதுங்கவை துடிக்கத்துடிக்கக் கொன்ற இரக்கம் அற்ற கொலைகாரர்களின் கும்பல் என்று மிகச் சில வருடங்களின் முன்னர் 'விரல்' சுட்டிக்காட்டி நேருக்குநேரே வெறுப்பு உமிழ ஜே.வி.பியினரை பேசியவர் சந்திரிகா.

இதே சந்திரிகா, ஆயிரக் கணக்கில் -தனது கணவர் உட்பட பலரை -சிங்கள மக்களையே கொன்றொழித்த கும்பலின் தற்போதைய தலைமறைவுத்தலைவர். சோமவன்ச அமரசிங்கவை லண்டனில் வைத்து தன் இருப்பிடத்திற்கு வரவேற்று "விருந்து' வழங்கிக் கௌரவித்துள்ளதாக 'சண்டேலீடர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதற்காக இந்த விருந்தளிப்பு கௌரவம் சோமவன்சவுக்கு வழங்கப் பட்டது...? விஜயகுமாரணதுங்கவை கொன்ற கொலைக்காரக்கும்பலின் தலைவர் என்பதற்காகவா?

இதேகேள்வியை 'விஜய' வின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல அவரின் பிள்ளைகளான அதே லண்டனில் கற்று வரும் புரட்சியும் (விமுக்தி) யசோதாவும் மனதில் எழுப்பாமல் இருப்பார்களா? இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சந்திரிகா கூறுவார்...? எதுவானாலும்...

ஜே.வி.பி, விஜயகுமாரணதுங்க உட்பட தான் மேற்கொண்ட சகல கொலைகளுக்கும், கொடுமைகளுக்குமான சனாதிபதியின் பாராட்டுதலையும், அங்கீகாரத் தையும் பெற்றுவிட்டதாக சந்திரிகாவின் இந்து விருந்து (இதை 'விருது' என்றும் கருதலாம் அல்லவா?) நிரூபித்துள்ளது.

'சீ... வெட்கம்....!' என சண்டேலீடர் குறிப்பிடுவதில், அர்த்தம் இருக்கவே செய்கிறது...

பாவம் விஜயகுமாரணதுங்க...!

பரிதாபத்துக்குரியவர்கள் அவரின் பிள்ளைகள்....!

## றொக்காவின் கருத்துக்களில் உடன்பாடும்... முரண்பாடும்...

சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டுள்ளது குறித்தவிடயத்தைவிடவும் சனாதிபதி-பிரதமர் ஆகியோருக்கிடையேயான சர்ச்சையில் அதிக அக்கறைகொள்ள வேண்டியுள்ளதாக அமெரிக்காவின் பிரதி இராஜங்க அமைச்சரான கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளமையானது ஒரு சரியான மதிப்பீடு என்று கொழும்பின் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையேயான முறுகல்நிலை அவர்களில் இருவரினதும் தனிப்பட்ட, அரசியல் அபிலாஷைகள் சார்ந்ததாகும்.



இந்த முறுகல் நிலையிலான 'ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின்' அரசியல் நகர்வுகள்தான், இந்த நாட்டின் தீர்க்கப்படாத சகல பிரச்சினைகளுக்கும் காரணமாக இருந்து வரும் சிறிலங்காவின் அரசியல் பாரம்பரியமுமாகிவிட்டது.

சிறிலங்காவின் இன-மத-மொழிசார் சகல சிக்கல்களுக்கும் இந்த 'விடாக் கண்டன்' கொடாக்கண்டன்' அரசியல் சுபாவங்களைக்கொண்டதான பேரினவாத தலைமைத்துவ சிந்தனைகளே காரணமாகும்.

இந்த நிலைமை தொடரும் வரைக்கும் சிறிலங்காவின் எந்தவொரு அரசியல் சார்ந்த பிரச்சினைக்கும் தீர்க்கமான நிரந்தரமான தீர்வொன்றை எட்டுவதென்பது சாத்தியமேயில்லை.

சந்திரிகா ஒரு தீர்வை கொடுக்க முன்வந்தால் ரணில் அதற்கு விடமாட்டார்.. அதனைக் கெடுக்கவே முனைவார்.. ரணில் கொடுக்க முனைந்தால் சந்திரிகா அதைக் கெடுத்தே தீருவார்... இதுதான் அவர்களின் அரசியல் யூக-வியூகங்களின் அடித்தளக் கோட்பாடாகும்.

இந்த நிலையில் சந்திரிகா-ரணில் சர்ச்சையின்மையினை முடிவுக்கு கொண்டு வராது, அவர்களுக்கிடையே ஒரு சர்வதேசக் கண்காணிப்பு மற்றும் அழுத்தத்துடன் கூடிய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் நிர்ப்பந்தத்தின் பேரிலாயினும் உருவாகாத வரையில் இந்த மண்ணில் எந்தப்பிரச்சினைக்கும் தீர்வுகாணுதல் சாத்தியமேயில்லை. அப்படி தீர்வுகண்டாலும் அத்தீர்வின் அம்சங்கள் எதுவும் அமுலாகும் நம்பிக்கையும் இல்லை.

இந்த வகையில் றொக்காவின் மதிப்பீடு சரியே...

ஆனால் அரசியல் பிரச்சினையை ஒரு புறம் தள்ளிவைத்து விட்டு சமாதான நடவடிக்கை வெற்றி பெறச்செய்ய அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று அவர் கூறியிருப்பதுதான் அர்த்தம் விளங்கமுடியாத 'அமெரிக்க தத்துவ'மாக உள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையின் அடிப்படையே ஒரு மிகவும் சிக்கலான அரசியல் பிரச்சினைதான். அப்படி இருக்கையில் அரசியல் பிரச்சினையை புறந்தள்ளிவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்க வேண்டும் என றொக்கா கூறுவதில் பலத்த முரண்பாடு இருக்கவே செய்கிறது.

அரசியல் பிரச்சினைக்கு அதுவும் ரணில்-சந்திகா ஆகியோரின் பாரம்பரிய அரசியல் செயற்பாடுகளால்- முரண்பாடுகளால் உருவாக்கப்பட்ட அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்குத்தான் இந்தச் சமாதானப்பேச்சுவார்த்தை. ஆகவே அரசியல் பிரச்சினையை புறந்தள்ளிவிட்டு சமாதானம் பற்றி பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமேகிடையாது.

சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் இடையிலான 'அரசியல்' பிரச்சினை மற்றும் முரண்பாடு முதலில் தீர்க்கப்படவேண்டும். அதனைப் புறந்தள்ளி விட்டு சமாதானத்தை முன்னெடுங்கள் என்பது அர்த்தமற்ற வேண்டுகோளாகவே இருக்கும்...

அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான பிரதி ராஜாங்க அமைச்சருக்கு இதுதெரியாமல் இருக்காது என்றே நம்புகிறோம்.

**செங்குட்டுவன்**

# சொல்லாமல் சொல்லும் சங்கதிகள்

அரசுக்கு நிதி சேகரித்துக் கொடுப்பது எமது வேலையல்ல என்று கடந்த வெள்ளிக்கிழமை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அவர்களிடம் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெரிவித்திருந்தார்.

கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாகத் தொடரும் சமாதானப் பேச்சு வார்த்தையினை அவதானித்து வரும் எவரும் புலிகள் பேச்சுக்களில் இப்போது இறுக்கமாக இருப்பதை உணர்ந்து கொள்வர்.

புலிகள் அரசுடன் அதிக விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள இனிமேலும் தயாராக இல்லை என்பதையும் புரிந்து கொள்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு நிலை தோன்றுவதற்கும் ஒரு வகையான உரிமைப்பிரச்சினைதான் இங்கும் காரணமாக இருக்கின்றது.

அதாவது அதிகம் பாதிக்கப்படாதவர் அதிகம் கேட்கும் உரிமையையும் அதிகம் பாதிக்கப்பட்டவர் அதிகம் கேட்கும் உரிமையைக் கொண்டிருக்கக் கூடாது என்ற நிலையை அரசு கொண்டதால் இத்தகைய ஒரு இறுக்க நிலை தோன்றியது.

இப்பொழுது அதிகம் கேட்கும் உரிமை புலிகளிற்கு வேண்டும் இது தமிழ் மக்களின் இருப்பை பலப்படுத்தும் என்பதால் புலிகள் அதிகம் கேட்கிறார்கள்.

சிறி.இந்திரகுமார்

புனர்வாழ்வு புனரமைப்பு யாருக்கு என்பதில் இப்போது ஒரு இழுபறி.

எப்படியாவது புலிகளை டோக்கியோ மாநாட்டிற்கு அழைத்துச் சென்று விடவேண்டும் என்பதில் சர்வதேசம் அதிகம் அக்கறைப்படுகிறது.

இதனைப் புலிகளிடமும் கேட்கிறார்கள். அதிகாரமாகவும் கேட்க முயல்கிறார்கள்.

இராசதந்திர அழுத்தங்களிற்கூடாகவும் செய்துவிட நினைக்கிறார்கள்.

இவையெல்லாவற்றையும் கொழும்பிற்கும் வன்னிக்கும் வந்து செல்லும் அதிகப்படியான இராசதந்திரிகளின் வருகைகள் உணர்த்துகின்றன.

முதலில் சொல்கெய்மும் பின்னர் அகாஷியும் பிறகு ஜோன் பீற்றர்சனும் கெல்கேசனும் வன்னிக்கு வந்து சென்ற ஒவ்வொரு பொழுதும் புலிகள் டோக்கியோ மாநாட்டிற்கு செல்ல இணங்கிவிட்டார்கள். என்ற செய்தி வரும் என எதிர்பார்த்தார்கள்.

வந்து போகின்றவர்கள் எப்படியும் புலிகளை அழைத்துச் சென்றுவிடலாம் என்றுதான் நினைக்கிறார்கள்.

ஆனால் புலிகளோ டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தால் ஒரு தீர்க்கமான முடிவினைப்பெற்றுக் கொள்ள

வன்னியில் உடைந்த ஒரு பாலம்



விரும்புகின்றனர். அதுவும் பெரும் எதிர்பார்ப்பைப் பெற்ற சிரான் அமைப்பு ஏறத்தாள ஒரு இயங்கா நிலைக்கு வந்துவிட்ட நிலையில் புலிகள் விரும்புகின்றனர்.

சிரான் இப் போது பெயரளவில் தான் இருக்கிறது. சிரான் இனம்கண்ட 15 திட்டங்களுள் பன்னிரண்டை அரசு களவாடிவிட்டது.

இதனை அரசு தனது வழமையான நிதி நடவடிக்கைகளிற்குள் மேற்கொள்ளப் போவதாக கூறியுள்ளது.

ஆனால் டோக்கியோ மாநாட்டில் நிதியின் பங்கை தன்பால் ஈர்த்துக் கொள்ளும் செயலின் ஒரு பகுதிதான் இது.

ஆனால் புலிகள் நிதி ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் மற்றும் ஏனைய அதிகாரங்கள் உள்ள ஒரு கட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றனர்.

சிரானின் இன்றைய நிலையிலிருந்து நோக்கும் போது

**"சன்சோனிக்" கமிசனின் சிபாரிசுப்படி சேமலாப நிதியத்திலிருந்தும் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்தும் நிதியை சேகரித்த போதும் பாதிக்கப்பட்ட உண்மையான தமிழ் மக்களை சென்றடையவில்லை.**

**எதுவுமே உறுதிப்படுத்தப்படாத நிலையில் உடையுமா உடையாத என்ற நிலையில் மக்களின் மனங்களை போலவே புனர்வாழ்வும் புனரமைப்பும் காத்திருக்கின்றன**

1981, 1983 கலவரங்களின் போது தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதும் போதாமல் புனர்வாழ்வு புனரமைப்பு என்ற ரீதியில் ஏமாற்றப் பட்டதும் நினைவிற்கு கொண்டு வரும்.

அப்போதும் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களின் பெரும் சொத்துக்களையும் சிதைத்து தமிழ் மக்களின் பொருளாதார கட்டுமானங்களை சிதைத்த போதும்.

இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தமிழ் மக்களின் புனர்வாழ்வு புனரமைப்பு எனக்கூறிக்கொண்டு ஒரு அமைப்பை உருவாக்கினார்.

"சன்சோனிக்" கமிசனின் சிபாரிசுப்படி சேமலாப நிதியத்திலிருந்தும் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்தும் நிதியை சேகரித்த போதும் பாதிக்கப்பட்ட உண்மையான தமிழ் மக்களை சென்றடையாத வேதனை மிகுசெயல்தான் அன்றும் நடந்தது.

அன்றைய அவ் அமைப்பினூடாக பெறப்பட்ட நிதியிலிருந்து அரசியல் வாதிகளும் ஜே.ஆர். ஜெவர்த்தனாவிற்கு வேண்டப்பட்டவர்களிற்கு மட்டும் தான் நிதிவழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனுக்கும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கும் . இரு பத்துநான்கு இலட்சம் வழங்கப்பட்ட தோடு அந்த நிதியம் அப்போது செத்துப் போனது.

பின்னர் இந்திய இராணுவக்காலத்திலும் இப்படி புனர்வாழ்வு புனரமைப்பு என படிவங்கள் நிரப்பப்பட்டதோடு தமிழ் மக்களிற்கு எத்தகைய புனர்வாழ்வும் புனரமைப்பு நிதியும் வழங்காது ஏமாற்றப் பட்டனர்.

இப்போது காலங்கள் பல கடந்தும் இழப்புக்கள், துயரங்களிற்கு மத்தியிலும் மக்களிற்கான புனர்வாழ்வு புனரமைப்பை புலிகள் உரிய முறையில் சென்றடைய செய்வதற்காக வாதிடுகின்றனர்.

டோக்கியோ மாநாட்டில் புலிகளை கலந்து கொள்ளுமாறு செய்வதற்காக காட்டப்படும் அதீத அக்கறை புலிகள் முன்வைத்துள்ள நியாய பூர்வமான கோரிக்கைகளை நிறைவு செய்ய எந்த வகையிலாவது சர்வதேசமோ அரசோ சாதகமாக செயற்பட்டார்களாஅல்லது செயற்படுகின்றார்களா என்றால் இல்லை.

வன்னியில் போக்குவரத்துக்காக பயன்படும் அதிக பாலங்கள் எல்லாம் நடுவில் மரணக்கிடங்குகளைப் போல வாயைப்பிழந்து நிற்கின்றன.

பாலங்களின் நடுவில் மின்சாரக் கம்பங்களைப்போல கிடங்குகளை எச்சரிப்பதற்காக அபாயசமிக்ஞைகளை தாங்கியபடி குத்துக்கட்டைகளாக காத்திருக்கின்றன.

இவ்வாறு எதுவுமே உறுதிப்படுத்தப் படாத நிலையில் உடையுமா உடையாத என்ற நிலையில் மக்களின் மனங்களை போலவே புனர்வாழ்வும் புனரமைப்பும் காத்திருக்கின்றன

வன்னிக்குச் சமாதானத்தின் பெயரால் வந்தவர்கள் அடிக்கல் நாட்டிய வெற்றிமனையும் சிறுவர் இல்லமும் அப்படியே அடிக்கல் விவகாரத்தோடே நிற்கிறது.

இந்தத் திட்டங்களுக்குக் கூட முழுமையான நிதி இன்னும் ஒதுக்கப்படவில்லை. இந்த நிலையில் டோக்கியோ மாநாட்டில்யாருக்கு யார் நிதியை பெற்றுக் கொள்ளப்போகிறார்கள். உண்மையான பயனாளிகளுக்கு சமாதானம் எதனையும் இன்னும் பெற்றுக் கொடுக்கவில்லை. இதனால் தான் புலிகள் இம்முறை அதிக இறுக்கத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். இதைவிட புலிகளின் இந்த இறுக்கம் சொல்லாமல் உணர்த்தும் சங்கதிகள் நிறையவே உள்ளன. இதனை எவரெவர் எப்படி புரிந்து கொண்டார்கள் என்பதில் தான் சமாதானத்தின் வேகமே தங்கியிருக்கிறது.

# அச்சுறுத்தலாக மாறுமா படைமுகாம்?



சில வாரங்களுக்கு முன்னர் யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் படைமுகாம் அமைக்கும் நடவடிக்கை தொடர்ந்த போது பெரும் எதிர்ப்புக்களின் பின் நிறுத்தப்பட்டு அதன் பின்னர் தற்போது யாழ் கோட்டைப் பகுதியில் புதிதாக படைமுகாம் அமைக்கும் நடவடிக்கைகள் கடும் எதிர்ப்புகள், கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

முன்னர் மாநகரசபை எல்லைக்குள் படைமுகாம் அமைக்கும் நடவடிக்கை தொடர்ந்தபோது இது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால் எதிர்ப்புகளின் பின்பு அதற்கு செவி சாய்த்து ஏற்குமாப்போல் அதனை நிறுத்திவிட்டது. இப்போது அதை விடக் கூடுதலான அச்சுறுத் தலை ஏற்படுத்தும் வகையில் கோட்டைப்பகுதியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக் கையில் முக்கிய விடயமாக மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் மக்கள் வாழ்விடங்களிலிருந்து இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன விலக்கப்படல் வேண்டும். ஆனால் இப்போது புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முற்றிலும் முரணான வகையில் புதிய முகாம் கோட்டைப் பகுதியில் அமைப்பது யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஊறுவிளை விக்கும் செயல் இது.

எனவே மக்கள் இதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம்.

இப்படைமுகாம் அமையும் இடம் அனைத்து தீவகங்களுக்கும் செல்லும் நுழைவாயிலாக இருப்பதால் தீவகமக்களின் இயல்பு வாழ்வுக்கு இது எப்பொழுதும் அச்சுறுத்தலாகவே இருக்கும்.

அண்மைக்காலங்களில் தீவகப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களில் அங்குள்ள மக்கள் ஏற்கனவே நொந்து போயுள்ளார்கள். தற்போது இத்தீவகங்களுக்கு செல்லும் பாதையில் இவ்இராணுவ முகாம் அமைவதால் அங்கிருக்கும் மக்களின் நிலை, ஒரு சிறைச்சாலையின் வாயிலினூடாகச் சென்று , திறந்த பெரும் சிறைச்சாலை கைதிகளாகவே வாழக்கூடியநிலையைத் தோற்றுவிக்கக்கூடும்.

எனவே இம்முகாம் அமைக்கும் நடவடிக்கை தொடங்கும் இடம் கேந்திர முக்கியத்துவம் கொண்ட யாழ்மையப் பகுதியாக இருப்பதால் எவ்வளவோ அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மக்கள் பெரும் இடையூறுகளை எதிர் கொள்ளலாம்.

திருத்திப் புனரமைப்பு செய்யப்படும்,யாழ் பொது நூலகம் அனைத்து கல்விமான்களாலும் பொதுமக்களாலும், கல்வியாளர்களாலும் கல்வித்தேவைக்களுக்குப் பயன்படுத்தமுடியாமல் இராணுவக் கெடுபிடிக்குள் அகப்படலாம்.

மக்களின் வீடுகளிலிருந்தும் பொது இடங்களிலிருந்தும் விலகிச்சென்று, அப்படைத்தளங்களை மீண்டும் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளிலும், மக்கள் கூடக்கூடிய பொது இடங்களிலும் அமைப்பது எதுவிதவேறுபாடாகவும் இருக்கப் போவதில்லை என்பதோடு, இது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உகந்ததாகவும் இருக்காது.

விடுதலைப்புலிகளால் தற்போது மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதற்கு இப்படியான இராணுவத்தினரின் அசமந்தப் போக்கும் காரணமாயிருக்கலாம். ஆகையினால் இந்த மாதிரியான நடவடிக்கைகள் தொடர்ந்தால் இயல்பு வாழ்வு எப்படித்தோன்றும்....?

க.ஜெயசீலன்

அன்பான மகன் காமினிக்கு

மருதநகர்,
கிளிநொச்சி.

கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் எனக்குப் பார்வை பெற்றுத்தந்த அந்த வைத்தியருக்கு நான் என்றென்றும் கடனாளியாகவும், நன்றியுடையவனாகவும் இருப்பேன் இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் சென்ற வாரம் காமினியும் குமுதுவும் கணவன் மனைவியாக விவாகப்பதிவுகாரர் முன்னிலையில் வந்து உங்கள் இருவரதும் வாழ்க்கை ஒப்பந்தத்திற் கையொப்பமிட்டதைப் பார்ப்பதற்கும், அதற்குச் சாட்சியாக நான் ஒப்பமிடக்கிடைத்ததும் எனக்குக் கண்பார்வை பெற்றுத்தந்த அந்த வைத்தியரால்தான். அந்த வேளை உன் அம்மாவின் கண்களிலிருந்து வழிந்தோடிய ஆனந்தக் கண்ணீர் என் மனதில் பழைய நினைவுகளைக் கொண்டு வந்தது. உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் திருமணம் நடந்த நாள் அப்பாவின் நண்பன் என்ற முறையில் நான் வாலிபனாக அவர்களின் திருமணத்தில் கலந்து கொண்டது நினைவில் நிழலாடியது. எங்களுக்கிடையே உள்ள உறவு எவ்வளவு காலமாக நீடித்து நெடுங்காலமாக நீடித்து வந்துள்ளது என்பதை இதன் மூலம் நீ அறிந்து கொள்வாய். உன் அப்பா ஒரு சிங்களவர். நான் ஒரு தமிழன். நீண்ட நெடுங்காலமாக எங்கள் சகோதரத்துவ உறவு நீடித்துள்ளதே: ஒப்பந்தம் ஏதும் எழுதியா அந்த உறவு நிலைத்தது? வாக்குறுதிகள் எதுவும் கொடுத்தா அந்த நேசம் நிலைத்து நீடித்தது?

காமினியும் குமுதுவும் பதிவாளர் முன்னிலையில் சீவிய காலம் முழுவதும் ஒருவரையொருவர் மதித்து நடப்போமென வாக்குறுதியளித்ததை நினைவிற் கொண்டுதான், அந்த வாக்குறுதி உங்கள் இருவர் மனதிலும் பலமான ஒரு அத்திவாரமாக அமையும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. உண்மையில் இக்காலத்தைப் போல் வார்த்தைகளால் வாக்குறுதி அளித்து ஆவண ரீதியில் ஒப்பந்தம் எழுதியல்ல எங்கள் முன்னோர் திருமணம் செய்துகொண்டது. அவர்கள் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்திருந்தார்கள். திருமண முறிவு என அப்பொழுது ஒன்று இருக்கவில்லை. பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்யும் பதிவுமுறையைப் புகுத்தியவர்களும் அவர்கள் தான். திருமண முறிவைப் புகுத்தியவர்களும் அவர்கள் தான். இன்று எங்கு பார்த்தாலும் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை இல்லை. பரஸ்பர விசுவாசமும், நம்பிக்கையும் பெரும்பாலும் முறியடிக்கப்படுகின்றது. இதனாலேயே கருத்து வேற்றுமை ஏற்படும் போதெல்லாம் வெள்ளைக்காரர் ஏற்படுத்திய வழக்கம் மன்றை நாடவேண்டியுள்ளது. பார்த்தாயா மகனே எங்களுக்கு நேர்ந்துள்ள அவலத்தை?

சாதாரணமாகக், குடும்பம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டால் அக்குடும்பத்தில் உள்ளோரால் தீர்வு காணப்பட முடியாதபட்சத்தில் மாத்திரமே வெளியார் ஒருவர் விவகாரம் தீர்க்க வருவது வழக்கம். சிலவேளை , நீதி மன்றத்திற்கும் போக நேரிடும். நாங்களும் எழுதிய மூலம் ஒப்பந்தம் ஒன்றினுள் பிரவேசிக்க நேரிட்டது இத்தகைய ஒரு சந்தர்ப் பத்தில் தான் சிலர் சொல்கிறார்கள், தமிழர் - சிங்களவர்கள் ஆகிய நாம் எல்லோரும் சமஉரிமை உடையவர்கள், எல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விதமாக. அப்படியிருந்தால் எவ்வளவு நல்லது? அப்படியிருந்தால் இத்தனை அழிவு நேர்ந்திருக்குமா? உண்மையில் எங்கள் நாட்டில் அது நடக்கவில்லை இன்று 2003ல் "நாங்கள் சமமானவர்கள்" என்று சொல்பவர்களுக்குத் தெரியவரவில்லை 1958 தொடக்கம் நீண்ட நெடுங்காலமாக நாங்கள் ஒப்பந்தங்கள் செய்யவேண்டி ஏற்பட்டதே தமிழராகிய நாம் சம உரிமை உடையவர்களாக மதிக்கப்படாததன் விளைவுதான் என்பது. ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதெல்லாம் சிங்கள இனவாதிகளும் கொழும்பு ஊடகங்களும் அழுது புலம்பியது எப்படி தெரியுமா? "தமிழர்களுக்கு கனக்கக் கொடுக்கப் போகிறார்கள்... நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள்.... என்றல்லவா அழுது புலம்பினார்கள். இந்தவிதமாக தமிழர்களுக்குக் கொடுக்கப் "போகிறார்கள்" என்ற தொடரில் இருக்கும் "கொடுக்க" என்ற சொல்லின் பின்னே மறைந்திருக்கும் அர்த்தம்தான் என்ன தமிழர்களாகிய நாம் இத்தீவின் உரிமைக்காரர்கள் அல்ல, எங்கோ வெளியிலிருந்து வந்தவர்கள், பூர்வகுடிகளல்ல, உரிமைகள் எதற்கும் உரித்துடையவர்கள் அல்ல என்ற கருத்துத்தானே அதன் பின்னே ஒளிந்திருக்கின்றது? "தமிழர்கள் எப்போதுமே எதையாவது கேட்டுக் கொண்டிருப்பார்கள், இப்போது கொஞ்சம் கேட்பார்கள் பின்பு முழுவதும் கேட்பார்கள்" என்பன போன்ற கதையெல்லாம் எங்கள் மீது குத்தப்படும் இழிமுத்திரை அல்லவா? உரிமை என்பது எவராலும் கொடுக்கப்படும் ஒன்றல்ல. ஒருவர் கேட்க ஒருவர் கொடுக்கும் பொருளல்ல. உரிமை. பூமித்தாயின் புத்திரர்களாகிய மனிதர்களுக்கு மாத்திரமல்ல, சகல ஜீவராசிகளுக்குமே உரிமையுண்டு. இராணுவம் குண்டு வீசிக்கலைக்க இருபது வருடங்களாக ஏதிலிகளாய் இடம் பெயர்ந்து வாழ்ந்த தமிழ் மக்கள், சமாதானம் பிறந்து விட்டதென நினைத்துக் கொண்டு தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பவேண்டும் என்று கேட்டால் அதற்கு "தமிழர்கள் கனக்கக் கேட்கிறார்கள், அப்படியெல்லாம் கொடுக்க முடியாது" என்று சொல்வது எந்தவகையில் நியாயம்? என்னவகை நீதி? தமிழ்மக்களுக்குச் சொந்தமான வீடு - வாசல்களையும் தோட்டம் - துரவுகளையும் இராணுவம் அடாத்தாகக் கைப்பற்றிக் கொண்டது எந்த ஒப்பந்தத்தின் கீழ்? தாம் பிறந்து வளர்ந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கேட்பது என்னவகை ஒப்பந்த மீறலைச் சார்ந்தது? தமக்குரியதான இடத்தில் தமிழ்மக்கள் வாழ உரிமை கோருவது எவ்விதத்தில் "தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்" ஆகிறது?




அன்பான மகனே, "கொடுக்கிறார்கள், கூடக்கொடுக்கிறார்கள், கொடுக்கவேண்டாம்" போன்ற வாக்கியங்கள் பிறப்பது பாதிக்கப்பட்டோரிடம் இருந்தல்ல, ஆளும் வர்க்கத்திடமிருந்தே இல்லாதவர்களிடமிருந்ததல்ல, கொடுக்காமல் வைத்துக்

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சிங்கள மாத சஞ்சிகையான வானவில் (தேதுன்ன)2003 மேமாத வெளியீட்டில் பிரசுரமான கடிதத்தொடரின் 9ம் பகுதி. தெற்கிலுள்ளகாமினி என்ற வாலிபனுக்கு அவனது தந்தையின் தமிழ் நண்பரான வயோதிபர் ஒருவர் வன்னியில் இருந்து எழுதுவதான கற்பனைக் கடிதத்தொடர் இது.**

கொண்டிருப்பவர்களிடமிருந்தே.... ஏன் தெரியுமா? இல்லாதவர்களிடம் கொடுப்பதற்கு என்னதான் இருக்கிறது. வைத்திருப்பவர்கள் கொடுக்காமல் வைத்திருக்க விரும்புவதால்தான் கொடுக்கமுடியாது என்கிறார்கள். விதேசிகள் இந்தத் தீவைக் கைப்பற்ற முன்பு, "கேட்கிறார்கள்" என்ற இழிமுத்திரை எங்களுக்கு இருந்ததில்லை. தீவின் மலைசார்ந்த மத்திய பகுதி கண்டி, மலைநாட்டு மக்களுக்குத் தங்கள் தேசமாய் இருந்தது. தெற்கே வாழ்ந்த மக்களுக்கு றுகுணை அவர்கள் தேசமாய் இருந்தது. தமிழராகிய எங்களுக்கு யாழ்ப்பாண- வன்னி இராசதானிகள் தேசமாய் இருந்தது. ஆக எங்கள் ஒருவருக்கும் கேட்பதற்கு என ஒன்றிருக்கவில்லை, கொடுப்பதற்கும் ஒன்றிருக்கவில்லை. அப்படியிருந்தும் நாம் முற்றாகப் பிரிந்து இருக்கவில்லை. போக்குவரத்து கொடுக்கல் - வாங்கல் இருந்தன, திருமணத்தொடர்புகள் இருந்தன, வாணிபம் நடந்தது. தேவை ஏற்பட்ட நேரங்களில் அந்நிய சக்திகளுக்கெதிராகத் தனித்தும் ஒன்று சேர்ந்தும் போர் புரிந்தோம். வெள்ளையர்கள் நாட்டைப் பிடித்து ஆண்டு அனுபவித்து விட்டு 'சுதந்திரம் கொடுக்கிறோம்' என்று சொல்லி என்ன செய்தார்கள். அரசியல் சீர்திருத்தம் என்ற பெயரில், தனித்தனி இராச்சியங்களாக இருந்த தீவை "ஒரு" நிர்வாக அலகிற்குக் கீழ் கொண்டு வந்து, தங்களுடன் ஒத்துழைத்த பிரபு வர்க்கத்துடன் நாட்டை ஒப்படைத்தது தான் அவர்கள் செய்த கைங்கரியம். இதிலே பகிடி என்னவென்றால் மகனே நாட்டைப்பிரிக்க இடம் கொடுக்க மாட்டோம் என்று தொண்டைகிழியக் கத்தும் இந்தப் பூமி புத்திரர்கள், தேசப்பிரேமிகள் என்று சொல்பவர்கள் செய்வதெல்லாம் ஆங்கிலேயர் எங்களிடையே பிளவு ஏற்படுத்தக்கொண்டு வந்த ஒற்றை ஆட்சி முறையைப் பேண முயல்வதன்றி வேறொன்றுமில்லை. ஒற்றையாட்சி அரசியல் முறையை கடவுளரைப் பூசிப்பது போல் பூசித்துக்கொண்டு இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி என்று எனக்கு விளங்கவில்லையடா தம்பி. யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கும் பாதையைப் போட்டது வெள்ளைக்காரர். அதற்கு இட்டிருக்கும் பெயரைப் பார். ஆங்கிலத்தில் A-9! தமிழ் சிங்கள ஒற்மைக்காகவா இதைச் செய்தார்கள்? அவர்களுக்கு வேண்டிய விதத்தில் நாட்டை ஆள்வதற்கல்லவா இவையெல்லாம் செய்தார்கள். உண்மையான தேசப்பற்று என்பது என்னடா தம்பி? இவை பற்றி கேள்வி எழுப்புவதும் புதிய கோணத்தில் சிந்திப்பதுமன்றோ தேசப்பற்று?

உங்கள் இருவரது திருமண ஒப்பந்தம் பற்றி எழுதப் புறப்பட்ட அப்பாவின் எண்ணம் எங்கேயோ போய்விட்டது. அதில்லையடா தம்பி. திருமண ஒப்பந்தம் என்பது எங்களுக்கே உரித்தான கலாச்சார முறைப்படி பூசனைக்குறி . ஒன்று. "கறிக்கு உப்புக் காணாது, முற்றம் கூட்டவில்லை, கொப்பரும் கொம்மாவும் தாறது என்று சொன்னது தரவில்லை" போன்ற அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தித் திருமண ஒப்பந்தத்தை முறிக்க முடியுமா? அப்படிச் செய்வது சமாதானமாக வாழவேண்டும். நோக்கில் கொழும்பு ஊடகங்களும், தேசப்பிரேமிகள் என்று தங்கள் கைச்சரக்கையும் சேர்த்து நடத்தும் காரியம் போன்றது. எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் இருவரும் ஒருவரை ஒருவர் சமமாக மதித்து இருவருக்கும் சுயகௌரவம் உண்டு என்பதை ஏற்று மதித்து நடந்தால் திருமண ஒப்பந்தத்தை மாத்திரமல்ல, எல்லா ஒப்பந்தங்களையுமே பழுது ஏற்படாது பாதுகாக்க முடியும். மாறாக ஒரு தரப்பு உரிமைக்கு ஏகபோக உரித்துடையவராகவும், மறுதரப்பு உரிமையின்றிக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவராகவும் ஏற்படுமேயானால் ஒப்பந்தம் என்பது அர்த்தமற்றுப் போய்விடும். குடும்ப உறவும்கூட அப்படித்தான்.

உங்கள் திருமண வைபவத்தில் எங்கள் பழைய நண்பர்களைக் காணக்கிடைத்தது குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். பழைய நண்பர்களை மாத்திரமா கண்டோம்? உனது இளைய தலைமுறை நண்பர்களையுமல்லவா காணமுடிந்தது. அவர்களுடன் நீண்ட நேரம் பேச முடிந்தது. அவர்கள் மனமுகடுகளில் தமிழர்களாகிய எங்கைளப் பற்றிக் கவிந்திருந்த சந்தேக முகில்களை அகற்ற முடிந்ததையிட்டு எனக்கு மிகுந்த மன நிறைவு ஏற்படுகின்றது. உன் அப்பாவும், நானும் சிங்கள- தமிழ் பேதமின்றி, சகோதரர்கள் போல நீண்ட காலம் நேசத்துடன் வாழமுடிந்தது. உனக்கும் உன் அப்பாவைப் போலவே நீதி- நியாயம் சகோதரர்கள் போன்ற உன்னத குணங்கள் உள்ளதை நான் அறிவேன். இன்று நீயும் குமுதுவும் வெறும் பொடியன் பெட்டை அல்ல. புதிய சவால்களை ஏற்றுக்கொண்டு புதியதொரு பொறுப்புள்ள பரம்பரையை உருவாக்கப் போகின்றீர்கள். நீதி- நியாயம் பற்றிய உணர்வுள்ள மக்கள் எங்களுக்கு நிறையத் தேவை. நீங்கள் இருவரும் அத்தகைய ஓர் பரம்பரையை உருவாக்க வேண்டுமென்று நாங்கள் பிரார்த்திக்கின்றோம். குமுதுவும் நீயும் வீட்டாருடன் சேர்ந்து அப்பாவின் கிளிநொச்சிக் கொட்டிலுக்கு வந்து போக வேண்டுமென்று அன்பாக அழைக்கின்றோம். (ஊரிலுள்ள வீட்டிற்கு வரும்படி அழைக்க முடியாதிருப்பது குறித்து வருந்துகின்றேன். நாங்களே போக முடியாதிருக்கும் போது உங்களை எப்படி அழைப்பது

இப்படிக்கு,
***அன்புடன்,***
***அப்பா.***



## தொடர்கதை

**அத்தியாயம்-10**

ஆங்கில மூலம் பிளானறி ஓ கொணரின்

# இடம் பெயர்ந்தவன்

தமிழில் சு.மகேந்திரன்

சில வேளைகளில் ஒரு சிறிய குழந்தை மார்புக்குள் தனது கைகளை விட்டு இறுகப் பிடிப்பதும் விடுவதும் போன்ற உணர்வு அவளது இதயத்தில் ஏற்படுவது உண்டு. இப்படியான நேரங்களில் அவளது அறிவுமுழுவதும் மங்கி ஒரு பெரிய எருது எந்தக்காரணமும் இன்றி அலைவது போல் அசைந்து திரிவாள்: இப்படி எந்த அதிர்ச்சியும் இல்லாமல் அவ்ஏற்றத்தின் உச்சியை அடைந்ததை யிட்டு அவள் மகிழ்ச்சியடைந்தாள். சடுதியாக அவள் கவனித்தபோது ஒரு நாடகத்திரை விலகியதுபோல் ஆகாயம் இரண்டாகப் பிழந்தது. அவள் முன் ஒரு பிரமாண்டமான உருவம் தோன்றியது. அதன் நிறம் மத்தியானத்தின் முன் அரைப்பகுதியினது போன்றும் சூரியனின் நிறத்தில் வெள்ளையும் பொன்னிறமுமாக இருந்தது. அதற்கு ஒரு விபரிக்கக் கூடிய உருவம் இருக்கவில்லை. அதில் மிகவேகத்துடன் சுழலும் சக்கரங்கள் தெரிந்தன. அச்சக்கரங்களுக்கு பயங்கரத் தன்மையுடன் கூடிய கறுத்தக் கண்கள் இருந்தன. அந்த உருவம் மிகப் பிரமாண்டமானதாக இருந்ததால் அது முன்னே வருகிறதா அல்லது பின்னே போகிறதா என மட்டிட முடியவில்லை. அதனை சரியாகப் பார்ப்பதற்கு கண்களை சிறிது மூடினாள். அப்போது உருவம் இரத்தச் சிவப்பாகவும் கறுத்தக் கண்கள் வெள்ளையாகவும் மாறியிருந்தன. சரியாக எதிரொலி வருவது போல் தோற்றம் அளித்த ஒரு குரல்' முன்னதாகவே அறிவி' என்று கூறியது. அவள் சிறிது தள்ளாடினாலும் கூட இப்போது நேராகவே நின்றாள். கண்கள் இறுகமூடி இருந்தன. கைமுட்டிகள் இறுகிய நிலையில் இருந்தது. கோடை கால தொப்பி அவளது நெற்றியை மூடி இருந்தது. துஷ்ர தேசத்து மக்கள் எல்லோரும் வதைபடுவார்கள் என பலத்த குரலில்கூறினாள். கைகள் இருக்கும் இடத்தில் கால்கள் இருக்கும் காது ஒன்று உள்ளங் கையில் இருக்கும். யார் முழுமையாக இருக்கப் போகிறார்கள் எவர் முழுமையாக இருக்கப் போகிறார்கள். எவர்......

பின்பு அவள் கண்களைத்திறந்து பார்த்தாள். ஆகாயம் முழுவதும் மீன்களைப் போல் பரவிக்கிடந்த முகில்களை ஒரு கண்ணுக்குத் தெரியாத ஓட்டம் தன்பக்கமாக இழுத்துச் சென்றிருந்தது. அதற்கு சிறிது அப்பால் சூரியன் பல கூறுகளாக உடைந்த நிலையில் வானத்தில் மூழ்கிக் கிடந்தது. நேரம் செல்லச் செல்ல முகில் மீன்கள் எதிர்த்திசையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது போல் தோன்றியது.

மரம் போல் உணர்வற்று ஒவ்வொரு அடியாக வைத்து, மேச்சல் தரையில் இருந்து இருப்பிடத்தை அடைந்தாள். அவள் தொழுவத்திற்கு ஊடாக வந்தபோது, பிரமிப்பு ஒன்றைக் கண்டு விட்டவள் போன்ற தோற்றம் அளித்தாள். அங்கிருந்த சோட்லியுடன் அவள் எதுவும் பேசவில்லை. வீதியால் முன்னேறிச் சென்றவள் மிஸிஸ் மக்கின்ரயரின் வீட்டின் முன் பாதிரியாரின் கார் நிற்பதைக் கண்டாள். 'எல்லாவற்றையும் நாசமாக்க திரும்பவும் வந்துவிட்டான்' என. தனக்குள் முணுமுணுத்தாள்.



தோட்டத்தில் மிஸிஸ் மக்கின்ரயர் பாதிரியுடன் உலாவிக் கொண்டிருந்தாள். அவர்களை நேருக்கு நேராக சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்காக, இடது புறமாகத் திரும்பி கால்நடை உணவு வைக்கும் அறைக்குள் சென்றாள். ஒரே அறையாக இருந்த அந்தக் கொட்டகையில், ஒரு பக்கம் முழுவதும் பறவைகளுக்கான அரைக்கப்பட்ட தீனியைக்கொண்ட சாக்குகள் நிரம்பியிருந்தது. மறு பக்கத்தில் சிற்பி ஓடுகள் அதிக அளவில் இருந்தன. சில அழுக்கடைந்த கலண்டர்கள் சுவரை அலங்கரித்து இருந்தன. அவற்றில் கன்றுக் குட்டிகளுக்கான உணவுகள் பற்றியும், அதிகாரபூர்வமான மருத்துவ பரிகாரங்கள் பற்றியும் விளம்பரங்கள் இருந்தன. ஒன்றில் மீசையுடன் கூடிய மனிதன் மேலங்கி ஒன்றை அணிந்து கொண்டு ஒரு போத்தலுடன் நின்றிருந்தான். அவனது கால்களின் கீழ் "இந்த அற்புதமான கண்டுபிடிப்பு எனக்கு சரியான வழியைக் காட்டியுள்ளது." என்ற சுலோகம் காணப்பட்டது. மிஸிஸ் சோட்லி அந்தப் படத்தில் உள்ள மனிதன் தனக்கு மிக நெருக்கமானவன் என நினைத்து வந்தவள். கெடுதியைத் தரப்போகிறவர் என அவள் நினைத்துவந்த பாதிரியின் வரவு, முன்பு கௌரவம் கொடுத்து ஒரு நண்பன் போல் பாவித்து வந்த அந்த கலண்டர் உருவத்தை அவளைப் பார்க்காமல் இப்போதெல்லாம் தடுத்து வந்தது. இரண்டு பலகைகளுக்கு இடையில் இருந்த இடைவெளியால் பாதிரியாரும் மிஸிஸ் மக்கின்ரயரும் வான் கோழிகள் அடைகாக்கும் பகுதிக்கு உலாவச்செல்வதை அவதானித்து கொண்டிருந்தாள். தீவனங்கள் வைக்கும் பகுதிக்கு நேரெதிராக அது இருந்தது.

அடைகாக்கும் பகுதிக்கு அண்மித்தபோது 'ஆ... இந்தச் சிறிய பறவைகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன.

(தொடரும்....)

---

## படித்ததில் பிடித்தது

# எங்கள் ஊர்



வயலினை பாலைவனமாக்குகின்ற
வெயிலுக்கு முன்னர்
உழவர் விரைந்தெழுந்து
'போயிலை' க்கு நீர் இறைக்கப்
போவார்கள்; போம் வழியில்
நாய்கள் விழித்துக்
குரைத்து நமை எழுப்பும்!
கோழிகளும் கொம்பிருந்து
கொட்டாவி விட்டெழுந்து
நாழியாய் விட்டதென
நாட்டுக் கறிவிக்கும்.

நேற்றைக்கு மொட்டாக.
நின்றவைகள் பூவாகி
காற்றில் குலுங்கும்! அதோ
கையிற் குடலையொடூர்ப்
பண்டாரம் வந்தான்:
பறித்தான் அவற்றை! இதைக்
கண்டுள்ளம் நோகக்
கவிகளா நாம்? -பின்னர்
காலை நெடுநிழல்கள்
காலடிக்குள் ஓடிவரச்
சேலைத்தலைப்பைத்
தலையில் இட்டார்கள் தெருவில்

சென்று கொண்டேயிருந்த
பெண்கள் சிலர்; மெய்யாய்
இன்று போல் வெய்யில்
இதுவரைக்கும் இல்லை என்றார்!
ஓர் மாமரம் தெருவின்
ஓரத்தில் உண்டு. அதன் கீழ்
ஊர்ப்பெண்கள் வந்தொன்று
சேருவார்; சேர்ந்து விட்டால்

சத்தத்திற்கென்ன
குறைச்சல் அச் சந்தையிலே?

முத்தல் வெண்டிக்காய்,
முளைக்கீரை, பூசணிக்காய்,
கத்தரிக்காய், மாங்காய்,
'கடற்காய்' எனப் பலவாய்
விற்றிடுவார். ஆதலினால்
'வேண்டப் பலர் வருவார்.

மத்தியானத்தில்
மரங்கள் செடிகளெல்லாம்
செத்துப் பிழைக்கும்;
சிறிதும் இரங்காமல்
வானிலிருந்தே நெருப்பு
வார்க்கும் பகலவனுக்கு
ஏனோ இக்கோபம்?

எரிந்தவன் சற்றோய்கின்ற
மாலை வரவும்,
மடை திறந்த வெள்ளம் போல்,
சோலை அதிரவரும்
சோளகக் காற்றைப்போல்
பள்ளி மதில்களினைப்
பாய்ந்தும், வெளியேறிப்
பிள்ளைகள் கோயிற்
பெருவீதியில் மொய்ப்பார்.

கிட்டி அடிக்கக்
கிளித்தட்டுத் தான் மறிக்க,
எட்டு மூலைக் கொடியும்
ஏற்ற அது ஏற்ற இடம்
வாரடிப்பார்; வீழ்ந்துடைந்து
வைத்துக் கொள்வார் காயம்.
நார் பிடித்துப் பாய்வார்கள்;
நாளைக்கு நாட்டினிலே
ஏரினையும் எந்திரத்தால்
ஓட்டிடுவார், ஊரையெல்லாம்
சீர்படுத்தி வைப்பார்.
சிறுவர்கள் அல்லவா?

மூத்தவர்கள் தங்கள்
முயற்சிக்கும் ஈடில்லை;
வேர்த்துழைப்பார் என்றும்
விடிந்தால் பொழுதுபட்டால்
புல்லும் தலைகாட்டப்
பொட்டல் நிலத்தினிலே
நெல்லும் விளைத்தல்
நிஜமன்றோ? பாழினையே
கிண்டி உழுது
கிடைக்கின்றவற்றை மட்டும்
கொண்டு மகிழ்தல்
குறையுடைத்தா?

ஓரொருநாள்
அண்டை அயலூரின்
ஆக்களையும் கூட்டி அவர்
வண்டியிலே மாடுகளைப்
பூட்டி அடிப்பார்கள்;
வாலைக் கடிப்பார்கள்.
வைத்திருக்கும் நீள்துவரங்
கோலினிலே தைத்திருக்கும்
ஊசியினால் குத்திடுவார்!
வண்டிச் சவாரியும்
மாதிரியே செய்து மிகக்
கொண்டாடுவார்கள்
குதிப்பார், குடித்தெனினும்
என்றைக்கும் எங்கேயும்
யாரும் அடையாவின்பம்
அன்றைக்கவர் அடைவார்
அன்றோ? அவ்வாண்டிகள்
ஒன்றை ஒன்று வென்றுவிட
ஓடுகையில் ஓரமெல்லாம்
நின்றவர்கள் கூச்சலிடும்
நேர்த்திக்கு ஒப்பு ஏதுளது?

ஊர்க் கோடியில் கொடியேறி
விட்டால் இரவெல்லாம்
'நாயின'த்தின் ஓசை!
நடு நடுவே வான் இடிதல்
போலத் தவில் அடிப்போன்
போடுகின்ற அச்சத்தம்!
காலிற் சதங்கை
'கலீர்' எனக் கூத்தாடும்
'சின்ன மேளங்கள்!
'சினிமாப் பாட்டுக்களுடன்
மின்னை இடியை
மிக ஒத்த வாணங்கள்...!
என்னால் இயலாதினி!

மஹாகவி

---

☞ கண்டனத்துக்குப் பின் அளிக்கும் ஆதரவு, மழைக்குப் பின் காயும் வெயில் போன்றது. - யொஹான் கேத்தெ.



சிறுகதை

# வாழ்ந்தவர்

வி.தேவபானு

கதிரவன் ஆத்திரமாகத்தான் எறித்துக்கொண்டிருந்தான். பல மைல்கள் சைக்கிளில் பயணம் செய்தகளைப்பு அவனது முகத்தில் துளித்துளியாய் அரும்பியிருந்தது. வீட்டின் பூமரங்களும் அதன் அழகும் அவனைக் கைநீட்டி அழைக்க, மாமரத்தின் கீழிருந்த கூடைக் கதிரையில் கிடந்த புத்தகத்தை எடுத்துவிட்டு அமர்ந்தவாறே புரட்டியவன்....

அந்த அவலக்குரல் காட்டுத்தீயை விட வேகமாகப் பரவியது: ஊரெல்லாம் இதைப் பற்றித்தான் பேச்சு; ஏனோ தெரியாது, நேற்று எப்படி இருந்தவர் இன்று... என்ன நடந்தது திடீரென்று....? எவ்வளவோ அன்பாகக் கதைப்பார், எவ்வளவு பண்பாகப் பழகுவார்...? அவர் என்றால் எத்தனை சின்னஞ்சிறுசுகள் "தாத்தா... தாத்தா" எனக்கூப்பிட்டிருக்கும். எத்தனை பேர் அவருக்கு பின்னால... 'தண்ணியில்லாதநல்ல பால்' என்றால் எல்லோருடைய வாயும் "ஐயாட்டப் போங்கோ" என்று தான் சொல்லும்.

'பால்காரஐயா' என்றால் அந்த ஊரில்தெரியாதவர்களே இருக்க முடியாது. அவர் கொஞ்சம் மாடுகளை வைத்து அதனைக் காலையில் மேய்ச்சலுக்கு கொண்டு போவதும், மாலையில் வீட்டுக்கு அழைத்து வருவதும் , ஒவ்வொரு பசுவிற்கும் ' இலட்சுமி பார்வதி ' எனப்பல பெயர்களை வைத்து அவைகளுடன் பேசுவதும், அழைப்பதும் 'அவரது வாழ்க்கையின் திருமந்திரமாக இருந்தது. ஊரார் வைத்த பெயர் காரணப்பெயராக அவரை ஒட்டிக்கொண்டது. அன்பாக அழைக்கும் இப்பெயரை ஏற்றுக் கொள்ள வேண்டியே இருந்தது. வயதுக்கேற்ற முதுமைத்தோற்றம் அவரை அணுக அவர் விரும்பாவிடினும், தானாகவே முதுமை அவரை அணுகிக்கொண்டது. மருத்துவபீட மாணவர்கள் இவரைக் கண்டால், நிச்சயமாக, பகுதி பகுதியாக பிரித்துப்படிக்க வேண்டிய தேவையின்றி முழுமனிதனாக நிறுத்திப் படிக்கக்கூடிய தோற்றம். உடல் அப்படி இருந்தாலும் அவர் உள்ளம் மட்டும் அதைவிஞ்சிப் பெருங்கடலாகவே பரந்து விரிந்திருந்தது.

ஆங்கிலம், சிங்களம் போன்ற பிற மொழிகளில் சரளமாகக் கதைப்பார். உண்மையாகக் கோபப்பட்டால் கூட அவர் மனம் மற்றவர்களை ஏசுவதற்கு அனுமதிக்காது. சிறு பிரச்சினை யென்றாலும் அதற்குத் தீர்வு காணவேண்டுமென்பது அவரிடம் ஆழப்பதிந்த ஒன்று. தன்னுடைய பொழுதை ஒரு நிமிடம் கூட வீணாகக் கழிக்கமாட்டார். என்றைக்கும் தான் கற்றதை பிறருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று துடிக்கும் அவர் மனம். நான் இவ்வுலகில் அடைகின்ற பயனை மற்றவர்களும் அடைய வேண்டுமென நினைப்பவர். சின்னப்பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக்கொடுக்கும் அழகைப்பார்ப்பவரை, தானும் ஏன் சின்னப்பிள்ளையாக இருந்திருக்கக்கூடாது என எண்ணிப்பொறாமைப்பட வைக்கும்.

வீட்டில் என்ன வேலை இருந்தாலும் ''ஐயா, இந்த வேலையை ஒருக்கா முடித்துத் தரவேணும்" என்று யார் கேட்டாலும் முதன்முதலாக வெளிக்கிடுகின்ற மனிதர்களில் ஊரின் முன்னுக்கு நிற்பவர் இவர் தான். இவரைப் பார்த்து சில சுயநலமான 'ஊர்ப் பெரியோர்கள்' பொறாமைப்படுவதும் உண்டு. ஆனால், 'இவர்களுடைய பொறாமை என்னை என்ன செய்யப்போகிறது?' என்று துணிந்து செயற்படுகின்ற ஒரு மனிதர் தான். மக்களுக்காக தினமும் பாடுபடும் மனிதனை யார்தான் என்ன செய்யமுடியும்? இடையிடையே இப்படியான தடங்கலை நேரடியாகச் சந்தித்தாலும் இவர் பின்நிற்பதில்லை. தனக்கென்றொரு தனியான கௌரவம், தனக்கென்றொரு இடத்தை ஊர் மக்களிடம் கல் வெட்டாகப் பொறித்திருந்தார்.

ஒரு நாள் ஏதோ ஒரு வேலையாக போனவர் வீடு திரும்ப நீண்ட நேரமாக இருந்தது. அவர் மனைவி, "மதியம் சாப்பிடக்கூட வராமல் அவருக்கு என்ன ஊர் உத்தியோகம் வேண்டிக்கிடக்குது; இவருக்கு ஒன்றென்டா யார் வருவாங்களாம்: ஊரில உள்ள மற்றவர்களுக்கில்லாத அக்கறை இவருக்கு எங்கிருந்துதான் வாறதோ தெரியாது" என்று சலித்தவாறு சோற்றுப்பானைக்குள் நீரை ஊற்றியவள், கலைந்த தனது கேசத்தை பிடித்து ஒரு உருட்டு உருட்டி உச்சஞ்தலையில் அமர்த்திவிட்டு, மூத்த பேத்தி பானுவை தூக்கிக்கொண்டு போய், படுக்கையில் சரிந்தாள். படுக்கும் போது சுவர்க்கடிகாரம் எட்டு மணியை காட்டி கண் சிமிட்டியது. ஆனால், அப்போதும் அவர் வரவில்லை. நேரம் 8.30 ஐக் காட்டியது. அவளுக்கு நேரம் போகப்போக வெறுப்புத்தான் கூடியதே தவிர, இன்னுங் காணவில்லையே....? ஏதும் பிரச்சினையோ..? பக்கத்து வீட்டு பெடியனைவிட்டுபார்ப்போம் என்ற எண்ணமோ எதுவுமே மனதில் தோன்றவில்லை. அந்த உணர்வுடன் உறங்கிப் போனாள்.

கடும் இருள்; மரங்களெல்லாம் பூதங்கள் மெதுவாகக்கையசைப்பது போல் கிளைகளைக் காற்றில் தவழவிட்டவாறு நின்றன. இடையிடையே இயற்கையின் ஒலிகள் திடீரென பறவை கீச்சிடும் சத்தம்; வண்டுகளின் இரைச்சல்; தவளைகளின் இடைவிடாத சத்தம்; மின்னல் இடையிடையே யன்னலினூடாக வந்துபோனது; மழைத் துளிகள் மெதுவாகச் சிணுங்கத் தொடங்கின. 'இந்த நேரத்தில் என்ன இப்படி' என சலிக்க, மழை சோவெனப் பெய்யத் தொடங்கியது. இடிமுழக்கம் 'கூரையைப்பியத்து விடுவேன்' எனச் சொல்லிவிட்டுப் போவது போல மோதி மோதி மறைந்தது. என்ன செய்வது? ஏது செய்வது என சற்றுப்பதற்றம் அடைந்தவர், தன்னை நிதானப் படுத்தித்தனது காதினருகே கையை வைத்து, மீண்டும் ஒரு தடவை காதைக் கூர்மையாக்கி, குரல் வந்த திசையை நோக்கினார்.

"பால்கார ஐயா... பால்கார ஐயா... ஓடிவாங்கோ என்ர பிள்ளையை காப்பாற்றுங்கோ''

அவ்வளவு தான் துள்ளி எழுந்தவர் விளக்கை ஏற்றவும் அவர் மனைவி கண்விழிக்கவும் சரியாக இருந்தது. அப்போதுதான், தான் எப்போதோ நித்திரையாகிவிட்டேன் என்பதைப்புரிந்துகொண்டாள். இப்போது அவளுக்கு கோபமும், வெறுப்பும் ஓடி ஒழிந்திருந்து, அமைதியாக தோற்றம் அளித்தாள்.

வெளியே சென்றவர், திரும்பி வந்த வேகத்திலேயே அவருக்கு பிடித்த மென் நீல நிற அரைக்கைச் சேட்டை எடுத்தவாறு "ராமுவின்ர மூத்தவளுக்கு ஏதோ வயிற்றில, கடுமையான வருத்தமாம் என்று கத்துறாளாம்' அவளை ஒருக்கா உமா டொக்கரிட்ட கொண்டு போய் காட்டிப்போட்டு வாறன், நீ கவனமாய் இரு என்றவாறு, அவளையோ, அவளது பதிலையேயோ எதிர்பாராது விரைந்தார். அப்போது அவள் ஆத்திரப்படவில்லை. 'எவ்வளவு படிச்ச பெண், இவளுக்கொண்டென்றால்... அந்த மனிசன் கஸ்ரப்பட்டு படிப்பிச்சது வீணாகிப் போய்விடுமே... அதுவும் அவங்கன்ர பள்ளிக்கூடத்தால முதன் முதலா மாகாண மட்டத்தில விளையாடுறதிற்குத் தெரிவு செய்திருக்கிறாங்கள், இந்தளவுக்கும் இந்த வருத்தம் ஆப்பு வைக்கக் கூடாது... கடவுளே.... காப்பாற்றிவிடு... அவளுக்கொண்டும் நடக்கக் கூடாது' என இறைவனை மனதால் வேண்டியவள் "போயிட்டுவாங்கோ" எனக்கூறினாள்.



பொழுது புலர்ந்து விட்டது முற்றத்து மல்லிகையின் மணம் அவளது நாசியைத்தாக்க, கண் விழித்தவள் திரும்பிப்பார்த்தாள். அருகே கணவனைக்காணவில்லை:

இன்னும் வரவில்லை என்றே தான் நினைத்துக்கொண்டு எழுந்து முகத்தைக்கழுவியவள், பால் கறக்க செம்பையும், தண்ணீர் வாளியையும் தூக்கியவாறு பட்டியை நோக்கி நடந்தாள். தற்செயலாக வண்டில்கொட்டிலை எட்டிப்பார்த்தவள், சுதந்திரமாக வண்டிலில் படுத்துக்கிடந்தவரைக் கண்டு, போக்குவரத்துக்களைப்பு, வேலைகளின் சுமை இவற்றின் மிகுதியால் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டாள். அவரை மெதுவாகத் தொட்டு அசைத்த போது, மீண்டும் புரண்டு படுத்துக்கொண்டார். அவருக்கு மேலும் தொல்லை கொடுக்க அவள் மனம் இடம்கொடுக்கவில்லை. தனது வேலைக்காக மாட்டுப்பட்டியை நோக்கி விரைந்தாள். பாலைக் கறந்து பானைகளில் ஊற்றிவைத்து விட்டு பானுவை பார்க்க வீட்டினுள் நுழைந்தாள். கால்மேல் காலைப்போட்டு இரு கைவிரல்களையும் கிடுகு போன்று பின்னித்தலை யணையாக வைத்து ஏதோ பெரிய ஆராய்ச்சியில் இருக்கும் விஞ்ஞானி போல் அழகாகப் படுத்திருந்தவளின் அழகை எவ்வளவு நேரம்தான் இரசித்தவாறு நின்று கொண்டிருந்தாளோ...?

'ஐயா..., ஐயா...' என்ற குரல் என்றுமில்லாதவாறு பலமாக அவர்களது படலையில் ஒலித்தது. அக்குரலில் அதிகாரமோ, அன்போ கலந்திருக்கவில்லை. பாலில் நீர் கலந்திருப்பது போன்று ஏக்கத்துடன் கூடிய அவலம் நிறைந்ததாகவே ஒலித்தது. இவ்வொலியை மீறியது 'கீறோ' வின் குரைப்பு. இவனது குரல் காதை அடைக்க "எப்ப இந்த நாயக்கு குலைக்கிறது என்று தெரியாது; சத்தம் போடாதே'' என்றவாறு படலையை நோக்கி நடந்த அவளது கால்கள் ஏனோ தட்டுத்தடுமாறின; நடக்க மறுத்தன; நரம்புகளில் எல்லாம் ஏதோ ஒரு உணர்வு ஏற்படுவது போன்ற தன்மை.அவளது ஊகத்தை உறுதி செய்யக்கூடியவாறே கலைந்த கேசம், கண்ணீர் வடிந்து கொண்டிருக்கும் முகம், 'எதையோ இழந்து விட்டோம்' எனக்கூறும் கண்கள், வாய்விட்டு அழமுடியாத வேதனையில் வாயைப்பொத்தியவாறு நின்ற ராமுவைப்பார்த்ததும் அவளது மூளை மின்னலைவிட வேகமாகத் தொழிற்பட்டது.

"இஞ்சேயப்பா... இஞ்சேயப்பா.. ஒருக்கா ஒழும்புங்கோவன்; நீங்கள் போய் அவனோட கதையுங்கோ; அவனப்பாத்தால் ஏதோ நடந்திட்டுது போலக் கிடக்கு'' என்றவளை, முறைத்து விட்டு,

''இப்ப என்ன...? நீயே இவ்வளவு அவசரமாய் ஊர் வேலைக்கு அனுப்பத்துடிக்கிறாய்'' என வெளிப்பூச்சாகக் கேட்டவர் வெளியே வர, ராமு அவரைக் கட்டியவாறு கதறத் தொடங்கினான். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவர்,

"நடந்தது நடத்திட்டுது, நீயே இப்படி அழுது கொண்டிருந்தால் வீட்டுக்காறரை எப்படிச் சமாதானப்படுத்த முடியும்" என்றவாறு, தனது கைகளால் அவனது கண்களைத் துடைத்தவாறே கேசத்தையும் சரிசெய்துவிட்டு அவனுடன் அவனது வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

என்னால அவளைக் காப்பாற்றமுடியவில்லை, அரை மணித்தியாலம் முந்திக் கொண்டு போயிருந்தாலும் இண்டைக்கு உயிரோட இருந்திருப்பாள்; என்னால ஒரு உயிரை வாழ வைக்க முடியவில்லையே? நல்ல எதிர்காலச் சிற்பியை இழ்ந்து விட்டோமே...? நல்ல பண்பான பிள்ளையைப் பறிகொடுத்திட்டோமே...? என அவர் மனம் தவித்துக் கொண்டே சென்றது.

"என்னண்ண..? எனக்கு ஏதோ சொல்லிப்போட்டு நீங்கள் யோசிக்கிறியள். எப்ப உங்களின்ர சொல்லைக்கேட்டேனோ அப்பவே என்னை ஓரளவுக்குத் திடப்படுத்திப் போட்டன்; இல்லாட்டி நானும் போய் ஒரு மூலையில் குந்தினால் , எதுவுமே அங்க நடக்காது. என்னண்டாலும் வீட்டில நான் தான் வேணும். நானில்லாட்டி ஒண்டும் ஒழுங்கா முடியாது" என்ற போது அவனுக்கும் தனக்கு மான மௌன இடைவெளி நீண்டிருந்ததை உணர்ந்து கொண்டார். அப்போதைய நிலையை மறைக்க,

''என்ன வருத்தமாம் அவளுக்கு...?

"அது.... புற்றுநோயாம்" என அவன் கூற, அவரால் இப்போது அதனைக் கேட்கவோ, மீண்டும் அதைப்பற்றி அறியவோ முடியவில்லை. வீட்டை அடைந்தவர் அவர்களுடன் சேர்ந்து ஏதோ கிடைத்ததைக் கொண்டு கிரிகைகளை ஒப்பேற்றி, தனது கடமையை முடித்த மனநிறைவுடன் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். அப்போது வழியில் வந்த நண்பர்,

"எங்க... ராமு வீட்டை போயிட்டுப் போறியள் போலக் கிடக்கு"

''ஓம்'' என்றவாறு நழுவப் பார்த்தவரை விடாது

"இவள் செத்ததை நினைச்சாத் தான் கவலையாயிருக்கு " என நீண்ட பெருமூச்சுடன்,

"சரி அண்ண...' என மிகுதியை விழுங்கியவாறுபுறப்பட்டார் சந்தியை கடந்து ஆலமர நிழலையடைந்திருப்பார்; சில இளைஞர்களது கேலிப்பேச்சு அவரது காதுகளைத் தாக்கின.

"இப்ப ஐயா வீட்டுக் கிணற்றில தண்ணி இல்லையாம்"

"ஏன்ரா"

"பால் யாவாரம் எல்லோ செய்யிறார்"

என்றது தான் தாமதம் கண்கள் கொவ்வைப்பழம் போன்று மாறின, இரத்த ஓட்டம் முன்பைவிட வேகமாகியது, உதடுகள் துடித்தன, உறுத்தும் விழியைத் திருப்பியது தான், அந்த இடம் இளைஞர்களால் விரைவாகக்காலி செய்யப்பட்டிருந்தது.

'ஏதோபோறது போகட்டும்; நான் நல்லவனுக்கு நல்லவன்; கெட்டவனுக்கும் நல்லவன், என்றவாறே பக்கத்து வளவிற்குள் காய்த்துக் குலுங்கிய மாமரத்தைப் பார்த்தவாறு வீட்டை அடைந்து, தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு, அமர்ந்தவர் மீண்டும் எழுந்து 'அக்கினிச் சிறகுகள்' புத்தகத்தை எடுத்து அதனோடு மூழ்கிவிட்டார்.

பொழுது மறைந்தும் புத்தகத்திலிருந்து விடுபட அவரால்

→

ஆத்திரம் அரியணை ஏறும் போது, நியாயம் வாயிலுக்கு வெளியே சென்று விடுகிறது. - மேத்யூ ஹென்றி.



# நூல் நோக்கு

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மணல் வெளி அரங்கு |
| ஆசிரியர் | : இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் |
| வெளியீடு | : தேசிய கலை இலக்கியப் பேரவை |
| விலை | : 125/= |

## மணல் வெளி அரங்கு விலை செலுத்துபவனின் குரல்

''வேருடன் பிடுங்கி வீசுதல்'' என்பார்களே அவ்வாறு யாழ்குடா நாட்டில் இருந்து லட்சோபலட்சம் தமிழர்கள் இடம் பெயர்ந்து வன்னிக்குள்- தென் மராட்சி வழியாக புகுந்தார்கள். ஒக்ரோபர் 30 1995ல் தொடங்கி ஏப்ரல் 1996 உடன் இந்தக் காண்டம் முடிந்தது.

முடிந்து விட்டதா? இல்லை. அதன் பின்னரும் சரியாகச் சொல்லப் போனால் 1995 ஒக்ரோபர் 30இன் மாலைப்பொழுது தொடங்கி அதன் பின்னரான- இன்று வரையான மேற்படி யாழ்குடா நாட்டு மக்களின் வாழ்வு, உணர்வு என்பவற்றை பிரதிபலிக்கிறது இச் சிறு தொகுப்பு. இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்து விட்டவர்கள், குடாநாட்டுக்குள்ளேயே வாழ நிர்ப்பந்திக் கப்பட்டவர்கள். வாழவிரும்பியவர்கள் சந்தித்த வாழ்வியல் இங்கே பதியப்பட்டுள்ளது.




வாழ்வியல், அரசியல், இராணுவக்கண்ணோட்டம், ஆன்மீகம் லௌகீகம் நிர்வாகம், இராணுவ நிர்வாகம் என குறித்த காலப்பகுதியில் மக்கள் மனங்களில் கோடுகளை உழுத நிகழ்வுகளை இவர் படம் பிடித்திருக்கிறார்.

மொத்தமாகப் பத்துக் கதைகளை மட்டுமே கொண்ட தொகுப்பில் 93 பக்கங்களில் ஒரு இனத்தின் சமகால வாழ்வியலையும், அரசியல் எதிர்பார்ப்புகளையும் பதிவு செய்துவிட முடியும் என்கிறது 'மணல்வெளி அரங்கு' திருப்பங்கள் நிறைந்த, கொதிநிலையான 25 ஆண்டுகளின் வரலாறு இலக்கியப்பதிவாக இத்தொகுப்பில் விரிகிறது.

*　　*　　*

ஒரு இலட்சியத்தைக் கொண்டுள்ள மக்கள் கூட்டம் அதை அடைவதற்கு கொடுக்கும் விலை என்பது எப்போதும் பெறுமதி வாய்ந்தது. அந்த விலை செலுத்தலினூடாகப் பெறும் உரிமை அல்லது விடுதலை என்பது கனதியானதாகவும் தூயதாகவும் இருக்கும். அதேவேளை இந்த விலை செலுத்துதல் என்பது பல்வேறு முனைகளிலிருந்தும் தீவிரமாகக் கருத்து ரீதியாகத்தாக்கப்படும் சூழல் இன்றைய உலகில் உள்ளது.

உரிமைகளை மறுப்பவர்களின் கைகள் எப்போதும் பலம் வாய்ந்ததாகவே இருப்பதால் அது அள்ளி வீசும் 'நலன்கள்' இந்தக்கருத்துப் போர் தொடுப்பின் அடிப்படையாக அமைந்து விடுகிறது. இந்தக் கருத்துப்போர் புரியும் புத்திஜீவிகளை எதிர்கொள்ளும் பாரிய பணியும் விலை செலுத்தும் மக்கள் கூட்டத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும். இந்தத் துயரத்தை ஒரு கவிஞன் பாடினான் ''மலைகளுக்கும் கூன் விழ வைக்கும் துயரம்'' என.

எங்கள் இனமும் அதற்கு விலக்கா என்ன? இங்கே நாமும் விலைசெலுத்துகிறோம். எனவே கருத்துப்போரையும் எதிர் கொள்கிறோம். அதற்கெதிரான 'போராட்டக்கருத் துருவாக்கத்துக்கும்' உழைக்கிறோம். மணல் வெளி அரங்கும் அதன் பாற்பட்டதே. இதன் ஆசிரியர் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் விலை செலுத்துபவராகவும் கருத்துப்போரை எதிர்கொண்டு எதிர்க்கருத்துருவாக்கத்துக்கு உழைப்பவராகவும் ஒரே நேரத்தில் தொழிற்படுகிறார். இந்த இருமுனைப் போரில் தான் சிலுவை சுமந்த வலியை அதன் போதான தழும்புகளை நீவியபடி வரிகளில் மிதக்க விட்டிருக்கிறார். பவளப் பாறையின் முட்டைகளாக அவை ஒளிர்கின்றன தமக்கேயுரிய நறுமணத்துடன். அந்த வலியை அனுபவித்த வர்களுக்கும; அதை அறிய விரும்பும் உள்ளங்களுக் கும் அம்மணத்தினை நுகரமுடியும்.

***

பெருமளவுக்கு இந்துக்களின் ஐதீக ங்களையே குறியீடுகளாகக் கொண்டு நகர்த்தப் பட்டுள்ளன பெரும்பாலான கதைகள். மேலும் சில குறியீடுகள் ஈழத்தமிழரின் தற்போதைய வாழ்வியல் சூழலிலிருந்து பிறந்தவை. ஒட்டு மொத்தத்தில் இந்தக் கதை கள் அனைத்துமே ஆசிரியரின் முன்னைய தொகுப்பு களிலிருந்து கதை சொல்லும் உத்தியினால் வேறுபட்டு நிற்கின்றன. ஆனால் அவரது உணர்வுத்தளமும், பார்வையும், இலட்சியமும் எந்தவித மாற்றத்துக்கும் உள்ளாகவில்லை.

எடுத்தாளப்பட்டுள்ள உவமைகளுங்கூட தமிழனின் புதிய வாழ்வியலின் கனிகளாகவே உள்ளதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

''தலையை முட்டும் கூரை கொண்ட எங்கள் தற்காலிகக் குடியிருப்பில் திரும்பிப்படுக்க இடமில்லை.

ஆனால் நில், இரடா, ஐ.சி.இருக்கா என்று கேட்கயாரும் இல்லை. இரவு கனிந்த பிறகு தெருவில் நடக்கப் பயப்படத் தேவையில்லை''

என்று அவர் விபரிக்கும் இந்த சுதந்திரத்தை அநுபவித்துவிட்டு. தற்போது அதனை இழந்திருப்பவர்களுக் குத்தான் அதன் அருமை புரியும். மின்விசிறியும்,தொலைக்காட் சியும், புழுதிபறக்காத தெருக்களும், ஏனைய வசதிகளும் அதன் காற்தூசிக்கு ஈடாகா.

''இப்படியான ஒரு நிலை நிரந்தரமாக வேண்டும்''
''எப்போது வரும் அது?''

என்ற முதலாவது கதையின் முடிவு மனதில் சுழன்று கொண்டே இருக்கிறது. உண்மையில் இத் தொகுப்பு பூராவும் இதே கேள்விக்கான தூண்டலே பரந்திருக்கிறது. இதன் வெற்றியும் அதுதான்.

''எப்போது வரும் அது?''

**பு.சிந்துஜன்**

---

முடியவில்லை. தற்செயலாகத் திரும்ப தேநீர்க் கோப்பை கண்ணில் பட்டது. எப்போதோ தேநீர் வைத்து விட்டுப்போனது, அப்போது தான் ஞாபகம் வர எடுத்து ஒரே இழுவையாக இழுத்து விட்டு நிமிர்ந்தார். கோயில் வேலை செய்த கணக்கு இன்னும் முடிக்கவில்லையென்பது அருகில் தொங்கிய பூக்கூடையைக் கண்டபோதுதான் நினைவுக்கு வந்தது. கணக்கு வேலையை எடுத்துப் போட்டுக் கொண்டு தொடங்கினார். ஓடி வந்த பானு அவரது தோள்களைப் பற்றியவாறு

''எங்க அப்பப்பா... போனீங்கள்....? நான் வீட்ட நிக்கிறன் என்னோட கதைக்காம அவற்ற வேலை, உங்களுக்கு இப்ப வேலை கூடிற்றுது, அப்பம்மா பாவம் நீங்கள் ஒரு வேலையும் வீட்டை செய்யிறேல்ல, எழும்புங்கோ அப்பம்மாவோட போய் சமையுங்கோ'' என்றவாறு முத்தமிட்டவள், அவரது பேனாவை எடுத்துக்கொண்டு ஓட முற்பட, எட்டிப் படக்கெனப்பிடித்துக் கொண்டார். அவளால் விடுபடமுடியவில்லை. தனது மழலைச் சிரிப்பைப் பணயமாகக்கொடுத்துவிட்டு, பேனாவை மெதுவாக வாங்கிக்கொண்டு அப்பம்மாவிடம் ஓடினாள்.

சோர்வுமேலிட, இரவுச்சாப்பாட்டை முடித்துவிட்டு பானுவைத் தூக்கிக்கொண்டு படுக்கைக்குப்போனார். இரவு வெகு நேரமாகியும் அவரால் வழமைபோல் உறங்க முடியவில்லை. கண்களை மூடினால் இருட்டாக இருக்கிறதே தவிர அங்கே தூக்கத்தைக் காணமுடியவில்லை; அது எங்கோ தற்காலிகமாக ஓடி ஒளிந்திருந்தது. முன்னைய நாள் அவசரமாகப் போனதிலிருந்து இரவுபடுக்கைவரை அவரது மனம் அசை போட்டுக்கொண்டிருந்தது. பிள்ளைகளின் அன்புகலந்த கண் டிப்பு, 'ஒருவேலையும் செய்யவேண்டாம், சாப்பிட்டுப்போட்டு வீட்டில பேசாம இருங்கோ, அங்க இஞ்ச திரிஞ்சு வருத்தத்தைத் தேடவேண்டாம்'. பிள்ளைகளுக்காக நான் வாழ்ந்தேன்; இப்போ எனக்காகப் பிள்ளைகள் வாழ்கின்றார்கள். நான் அவர்களுக் காக வாழவேண்டும் எனக்கண்களை மூடினார்.

காலைத் தேநீருடன் சென்றபோது அவளுக்கு உண்மை தெரிந்தது. நேரடியாகவே தன் கண்களால் கண்டுகொண்டவளுக்கு அவளது கண்களையே நம்பமுடிய வில்லை. என்றுமில்லாதவாறு படுக்கையிலிருந்து விலகி வெறும் நிலத்தில் சோர்வாகப்படுத்திருந்தார். 'என்ன ஒரு நாளும் இல்லாதபடுக்கை, இப்படிப்படுத்திருந்ததை என்ர வாழ்க்கையில காணேல்லயே; வேலை அலுப்போ? பாயை விட்டு விலகினது கூடத்தெரியாம அந்தளவு நித்திரை அவ ருக்கு' என நினைத்தவள் கையை அவர்தோளில் வைக்க, அவர் உடல் சூடிழந்து வெகுநேரமாகியிருந்ததை உணர்ந்து கொண்டாள்.

''சித்தா''என பானு அழைக்க தனது கையிலிருந்த தந்தையினுடைய ஓராண்டு நினைவு மலர் மீது படிந்திருந்த பார்வையைத் திருப்பி அவளைத்தூக்கி முத்திமிட்டவாறே
''அம்மா என்னடா செய்யிறா''
''அவ சமைக்கிறா: சாப்பிட்டுப் போகட்டாம்''
''அம்மாக்கு என்னெண்டு தெரியும் நான் வந்தது''
''நீங்கள் புத்தகம் படிச்சுக்கொண்டிருந்ததைக்கண்டவவாம்; அது தான் சொல்லி விட்டவ, இது என்ன சித்தா பாப்பம்''
என வேண்டிப் புரட்டியவள்,
''எங்கன்ர அப்பப்பா''எனக் கூறித்தனது கன்னங்களுடன் அணைக்க, அவனால் அவனது கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை....

---

## கண்ணே நீ உறங்காய்



**தருமை வதனன்**

எங்கள் உறக்கம்
கவலந்ததில் தான்
அவர்களுக்கு
எத்தனை கவலை
பாவம்
முகமிருண்டு போனது
அமாவாசையாய்

நாங்கள்
ஆழ்ந்துறங்குவதில்
அத்தனைபிரியம்
அவர்களுக்கு

வெடிச்சத்தங்களே
எங்களை விழிக்கச்செய்கின்றன
என்பதால்
துப்பாக்கியின் வாய்மூடி
மேசையிலமர்ந்து
தாலாட்டுப் பாடுகிறார்கள்

மேல்அழுத்தாமல்
ஆழ்ந்துறங்க
மெத்தைகளும் தலையணைகளும்
எங்கள் முகவரிக்கு
அனுப்புகின்றனர் கரிசனையாய்

அவைகளில்
சில்விடும் இரத்த ரேகைகள்
எங்கள் இமைகளை
பிடுங்கிச் செல்கிறது அதோ...!

இப்போதும்
அவர்களது பாட்டுத் தொடர்கிறது
ஒப்பாரியாய்.

---

## வடுக்கள்



உப்பளத்து மூலைகளும்
அள்ளிக் கொட்டுகின்ற
அலைகளும்
அமைதியாய் இருக்கிறது
போர்க்களம் என்ற
பெயர் மாற்றத்தால் உண்டான
கொப்பளக் காயங்கள்
இன்னும் ஆறிவிடவில்லை
ஆங்காங்கே இரும்புக்
குழல்களும்
ஈச்சம் முட்களின் மேல்
வெளுறியும்
பச்சை கரையாமல்
கிழிக்கப்பட்ட சக்கை
இராணுவ உடைகளும்
உயிர்களை உறிஞ்சிக்
குடித்ததை
நினைவு படுத்துகிறது
மீண்டும்
கடலின் மேலாக
வள்ளங்கள் மிதந்து, நிறைகிறது
வயிறும் மனமும்
இருந்தும் அந்தக்
கசப்பான சில மிடறுகள்
ஊறிக் காய்ந்து
கறை படிந்துதான் போனது.
காலத்தின் நீளத்தில்
இந்த ஞாபகங்கள் தேய்ந்தாலும்
அதன் வடுக்கள், தழும்புகளாக
இருந்து கொண்டேயிருக்கும்
யார் கண்ணையும் மறைக்காதபடிக்கு.

**ப.அருள்நேசன்**



# இளையநாதம்



## புத்திசாலிச் சிறுவர்கள்

ஓர் ஊரிலே மூன்று புத்திசாலிச் சிறுவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மூவரும் ஒரு வழியால் சென்று கொண்டிருந்த போது எதிரே ஒரு முதியவர் எதனையோ தேடுவது போன்று வந்தார். அப்போது மூன்று சிறுவர்களில் ராஜ் என்ற சிறுவன் முதியவரே! நீங்கள் எதையோ தேடுகிறீர்கள் போல தெரிகிறது. ஒட்டகத்தையா



என்றான். அதற்கு முதியவர் ஆம் என்றார். மற்றச்சிறுவன் தர்ஷன் முதியவரே உங்கள் ஒட்டகத்தின் மேல் பொதி ஏற்றி இருந்ததா? என்றான். அதற்கும் முதியவர் ஆம் என்றார். மூன்றாவது சிறுவன் குமரன். முதியவரே உங்கள் ஒட்டகத்திற்கு ஒற்றைக்கண் தெரியாதா? என்றான். அதற்கும் முதியவர் ஆம் என்றுவிட்டு கேட்டார் சிறுவர்களைப்பார்த்து என் ஒட்டகத்தை நீங்கள் கண்டீர்களா? என்றார். மூன்று சிறுவர்களும் இல்லை என்றார்கள். அதற்கு முதியவர் இச்சிறுவர்கள் தான் என் ஒட்டகத்தைத் திருடிஉள்ளார்கள் என்று எண்ணி அவ் ஊர் பெரியவரிடம் முறையிட்டார். அப்போது ஊர்ப் பெரியவர் சிறுவர்கள் மூவரையும் நீங்கள் தானே இம் முதியவரின் ஒட்டகத்தை திருடினீர்கள் என்றார். மூவரும் இல்லை என்றனர். அப்படி என்றால் அம் முதியவர் ஒட்டகத்தைத்தான் தேடுகிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்றார். நாங்கள் சென்று கொண்டிருந்த வழியின் எதிர் வழியில் ஒட்டகத்தின் அடியும் அதன் நாணயக்கயிறும் இழுபட்டு நிலத்தில் அடையாளம் தெரிந்தது. முதியவரும் எதையோ தேடுவது போன்று வந்தார். அதனால் தான் நான் அப்படிக்கேட்டேன் என்றான் ராஜ். அப்போது தர்ஷன் என்ற சிறுவன் இவரது ஒட்டகம் சென்ற பாதை முழுதும் தானியங்கள் சிதறுண்டு கிடந்தது. அதனால் தான் நான் இவரது ஒட்டகத்தில் பொதி இருந்திருக்கும் என்ற ஊகத்தினால் அப்படிக்கேட்டேன். அப்போது மூன்றாவது சிறுவன் இவரது ஒட்டகம் சென்ற வழியின் இரு மருங்கிலும் புற்கள் செழித்து வளர்ந்திருந்தது. ஆனால் ஒரு ம்ருங்கில் உள்ள புற்களை மட்டும் மேய்ந்து இருந்ததினால் தான் நான் அவரது ஒட்டகத்திற்கு ஒற்றைக்கண் தெரியவில்லை என்று ஊகித்ததால் அவ்வாறு கேட்டேன் என்றான் குமரன் என்ற சிறுவன். இதைக்கேட்ட முதியவர் சிறுவர்களிடம் தர்ன் தெரியாது செய்த பிழையை மன்னிக்குமாறு வேண்டினார். அதற்குச் சிறுவர்கள் முதியவரைத் தேற்றினார்கள். அந்த ஊர்ப்பெரியவர் சிறுவர்களின் இத்திறமைக்கு அவர்களை வாழ்த்தி பொற்காசு நிரம்பிய மூன்று முடிச்சுக்களை மூன்று சிறுவர்களுக்கும் கொடுத்தார். மூன்று சிறுவர்களும் அதனைப் பெற்று மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

**பூ.நிரஞ்சன்**
**மு/புதுக்குடியிருப்பு ம.வி.**

## வாரம் ஒரு குறள்



உள்ளதை உள்ளவாறு சொல்வதில் உலகம் தவறி நிற்கிறது. உள்ளதைச் சொல்வதில்லை, சொல்வதைச் செய்வதில்லை. பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து விட்டதால் பொய்யான உலகம் வளர்ந்து வருகிறது. இதற்குள்ளே நடக்கும் எதையும் நம்ப முடிவதில்லை. எவரையும் நம்ப முடியவிலலை. ஆகவே எதையும் எவரையும் ஆராய்ந்து அறிய வேண்டிய பொறுப்பு எல்லோருக் கும் ஏற்பட்டுள்ளது. இதனால் தான் வள்ளுவப் பெருந்தகை தமது குறளில்.

**"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்**
**அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பதறிவு"**

என்று அழகுறச் சொல்லியுள்ளார்.

## தமிழீழம் பற்றி அறிவோம்

| | | |
|---|---|---|
| 01. | பரந்தன்:- | இரசாயனத் தொழிற்சாலை. |
| 02. | ஒட்டுசுட்டான்:- | ஓட்டுத் தொழிற்சாலை. |
| 03. | ஆனையிறவு:- | உப்புத் தொழிற்சாலை. |
| 04. | வாழைச்சேனை:- | கடதாசித் தொழிற்சாலை. |
| 05. | கந்தளாய்:- | சீனித் தொழிற்சாலை. |
| 06. | காங்கேசன்துறை:- | சீமெந்துத் தொழிற்சாலை. |
| 07. | திருகோணமலை:- | கோதுமை மாஆலை (பிறீமா) |
| 08. | புல்மோட்டை:- | இல்மனைட் தொழிற்சாலை. |

**செங்கதிர்.**

## நட்பாய் இருப்போம்

*பள்ளிச்சிறார் நாம்*
*பண்பான பாலகர் நாம்*
*நட்பு எனும் மூன்றெழுத்தை*
*முறையாக பயின்றிடுவோம்.*

*சாதி மத பேதமின்றி*
*அன்பான நண்பர்களை*
*பாசமாக நேசித்து*
*நட்பாக நாம் வாழ்வோம்.*

*நல்லவராய் நாமிருந்து*
*வல்லவராய் வாழ்ந்திடுவோம்*
*நட்பாக நாமிருந்து*
*நாட்டை வளர்த்திடுவோம்.*

**கு.சிவநந்தினி,**
**மு/அனிஞ்சியன்குளம்**
**அ. த. க. பாடசாலை**

## பொது அறிவு

*01. முதன் முதல் எவ்வாண்டு எங்கு தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடை பெற்றது?*
மலேசியா, 1966ஆம் ஆண்டு.

*02. இலங்கையின் முதலாவது பிரதமர் என வர்ணிக்கப்பட்டவர் எத்தினத்தின் போது காலமானார்?*
2001ஓகஸ்ற்10ஆம் திகதி
11வது பாராளுமன்றத் தேர்தலின் போது காலமானார்.

*03. கொழும்பு பல்கலைக்கழகம் எவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டது?*
1942ஆம் ஆண்டு.

*04. உலக வங்கியின் தலைமைச் செயலகம் எந்நாட்டில் அமைந்துள்ளது?*
வொசிங்டன்.

*05. 1ஆம் உலகமகா யுத்தம் எவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு, எவ்வாண்டு முடிவுற்றது?*
1914தொடக்கம் 1918வரை.

**ஞா.கீத்தாளினி,**
**கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம்.**

## விஞ்ஞான விளக்கம்

### தாவரங்கள் இரவில் தூங்குமா?



பகல் முழுதும் வேலைசெய்து களைத்துப்போய் நாம் இரவில் தூங்குவதைப் போல தாவரங்கள்தூங்குவதில்லை. ஆனால் அவை இரவில் உணவு தயாரிக்காமல் ஓய்வாக இருக்கின்றன. ஒருவிதத்தில் அதையும் தூக்கம் எனலாம்.

தாவரங்கள் வாழ்வதற்கும் வளர்வதற்கும் இன்றியமையாதது சூரிய ஒளி, சூரிய ஒளியில் இலைகளும் மலர்களும் நன்கு விரிந்து எவ்வளவு ஒளியைப் பெறமுடியுமோ அவ்வளவையும் பெறுகின்றன.

சூரிய ஒளி ஆற்றல் கிடைக்கும் வரையில் உணவுத்தயாரிப்பு வேலை சுறுசுறுப்பாக நடைபெறுகிறது. சூரியன் மறைந்ததும். வெப்பத்தை இழக்காமலிருக்க மலர்கள் கூம்பிவிடுகின்றன. நல்லவெளிச்சத்தில் உள்ள பூக்களின் இதழ்கள் விரிந்து காணப்படுவதையும், இருட்டில் உள்ள பூக்கள் கூம்பியிருத்தலையும் பார்க்கிறோம். இப்பூக்கள் மீண்டும் சூரிய, ஒளியைப்பெற்றால் இதழ்கள் விரிகின்றன.

## நகைச்சுவை



**ஒருவர்:-**
டாக்டர் எனக்கு வரவர ஞாபகமறதி அதிகமாகிக் கொண்டே வருகுது. இதனால் எங்கே போவது எங்கே வருவது என்றே தெரியவில்லை.

**மற்றவர் :-**
நீங்கள் இப்ப வந்து பேசிக்கிட்டு இருப்பதே டாக்ரரோடை இல்லை. போலிஸ் அதிகாரியிடம்.

இ.ராஜ்குமார்,
மு/புதுக்குடியிருப்பு.ம.வி

## குறுக்கெழுத்துப் போட்டி 21




### இடமிருந்து வலம்

01. அரிச்சந்திரன் மனைவி.
06. நீர்ப் பொருள் குழம்பி உள்ளது.
07. மிருகங்களின் அரசன் குழம்பி உள்ளது.
08. மலையின் உச்சி.
10. பறவைகளில் ஒன்று குழம்பி உள்ளது.
14. நேரம் காட்ட உதவுவது.
20. சூரியன் குழம்பி உள்ளது.
21. மாதம் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
29. நூறு இறுதி எழுத்தை இழந்துள்ளது
33. தபால்.

### மேலிருந்து கீழ்

01. யாழ்ப்பாணத்தை ஆண்டகடைசித் தமிழ் மன்னன்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.19 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. அன்னை. | 01. அச்சாணி. |
| 05. வீடு. | 02. சந்திரன். |
| 10. சிரசு. | 03. கருனை. |
| 14. திருடன். | 05. வீரன். |
| 29. யாழ். | 22. கழுதை. |
| 31. தை. | 24. வியாழ(ன்) |
| 35. விதி | 27. கிளி. |

**குறுக்கெழுத்துப்போட்டி இல.19 இன் பரிசுக்குரியவர்**
**ஜெ.ஜெயூரன்,**
**மு/விசுவமடு.ம.வி,**
**விசுவமடு.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.19 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

ம.சுகிர்தா,
அரசினர்வைத்தியசாலை,
மல்லாவி.

செ. தர்சினி,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

செ.ஷோபா,
கெங்காதரன் குடியிருப்பு,
அக்கராயன்குளம்.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.21
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

தளர்ந்தவனைத் தூக்கி நிறுத்தல் போதாது; பின்னர், தாங்கித் துணை நிற்க வேண்டும். - வில்லியம் ஷேக்ஸ்பியர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு பெருகூட்டும்

## புழுதி ஆற்று அபிவிருத்தித் திட்டம்

**சிவக்கொழுந்து புவனேஸ்வரன்**

**01. வன்னி மண்ணின் பிறப்பும் இயல்புகளும்:-**

வன்னிமண் வளம்பலபொருந்தியது. அடங்காத்தமிழ்ப்பற்றும், மண் பற்றும் உள்ளவர்கள் வாழ்ந்ததும், வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் கொண்டு விளங்குகின்றது. இப் பிரதேசத்தில் நெல்லுடன், சிறுதானியங்களும், மற்றும் எப்பயிரும் வளரும் வாய்ப்புமிக்கது. காடும், காடு சார்ந்த முல்லைப் பிரதேசமாகிய இந்நிலத்தில் மழை நீரைச்சேமிக்க போதிய நீர்நிலைகள் இல்லாததால் மழைமூலம் கிடைக்கும் பெருமளவு நீர் கடலுடன் சங்கமமாகின்றது. நில அடி நீர்சுனைகள் அரிது, இதன் உண்மையை உணர்ந்தே பண்டைய மன்னர்கள் அருவிகளை மறித்து நீர்த்தேக்கங்களை கட்டினார்கள். இவற்றில் அநேகமானவை காலகதியில் தூர்ந்து, உடைந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே இன்றைய அமைதிச்சூழலில் நீர்த்தேக்கங்களைப் புனரமைத்து மழைநீரில் கணிசமான அளவு தேக்கப்பட்டால் எமது பிரதேசப் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்த்தேக்கமாக உள்ள இரணைமடுக்குளம் 1902ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு காலத்துக்குக்காலம் புனரமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதாலேயே இப்பிரதேசம் “நெற்களஞ்சியம்” என்று சொல்லுமளவிற்கு பெயர்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தில் பல நீர்த்தேக்கங்களிலிருந்தும் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நீர்நிலைகளின் இடைவெளித்தூரம் அதிகமாக இருப்பதும் ஒன்று. இதனால் குடிநீர்ப்பிரச்சினையும் மற்றும் நீர்ப்பிரச்சினைகளைத் தீர்க்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப்பகுதி திட்டமிட்டபடி நீர் நிலைகளைப்பலப்படுத்தியும், தூர்ந்த குளங்களை புனரமைத்தும் நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதில் நீர்ப்பாசனத்திணைக்களத்துடனும், அதுசார்ந்தவர்களுடனும் இணைந்துசெயற்பட்டுவருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் பொருளாதாரத்தை வளப்படுத்தி உள்ளது. இதற்கு உதாரணமாக 1993ல் உடைப்பெடுத்த முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார் கட்டுக்குளம் பொருளாதாரத்தடைகள் இருந்த 2000ம் ஆண்டு புனரமைக்கப்பட்டதால் இப்பிரதேசத்தை வளம் கொழிக்கச் செய்துள்ளது. இதேபோன்று இம்



மாவட்டத்தில் 45 வருடத்திற்கு மேல் தூர்ந்த நிலையிலுள்ள மருதமடுக்குளமும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறே கிளிநொச்சி மாவட்டத்தில் புழுதியாற்றினால் வீணாகச்செல்லும் நீரைப்பயன்படுத்தும் நோக்குடன் கடந்த 20 வருடங்களுக்கு மேல் ஒரு புதிய குளமும் வன்னிப்பிரதேசத்தில் அமைக்கப்படாத சூழ்நிலையிலும் நெருக்கடியான பொருளாதாரதடைகள் இருந்த காலப்பகுதியிலும், இக்குளம் நிர்மாணிக்கப்பட்டமை நிறுவனத்தின் ஒரு சாதனையாகக்கருதப்படுகின்றது.

**02. புழுதியாற்று நீரணையின் உதயமும், பின்னணியும்.**

புழுதியாறு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய பாரிய குடியேற்றத்திட்டக் கிராமங்களிற்கூடாக இரணைமடுக்குளத்தின் கிழக்குப்பக்கமாகக்காணப்படுகின்ற மாவடி அம்மன் ஆலயத்தின் முன்பாக பாய்ந்து வரும் நதிநீர் பெரிய குளத்தை நிரப்பி கண்டாவளைப் பிரதேசம் ஊடாக கடலுடன் சேர்கின்றது. மாரிகாலத்தில் இவ்வாற்றால் பெருகும் நீரால் வேளாண்மை பாதிப்படைவதுடன், குடியிருப்புக்களில் இருந்தும் மக்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இப்பகுதிவிவசாயிகள் இவ்வாற்றை மறித்து குளம் அமைத்தால் வரட்சியை நீக்குவதோடு மட்டுமல்ல, நீர்ப்பாசனம் மேற்கொள்ளலாமென கருதினர். இங்கு விவசாயப் போதனாசிரியராக இருந்த திரு. கந்தசாமி அவர்களுடன் இணைந்து 1992ம் ஆண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தேசநிர்மாணிகள் அமைப்பினர் யாழ்ப்பாணம் சென்று அவ்வமைப்பிலிருந்து திரு. சி.வடிவேலன் (ரவிராஜ்), திரு.வி. சிவானந்தராசா ஆகியோருடன் தொடர்பு கொண்டனர். அவர்கள் இவ்விடம் வந்து களஆய்வினை நடாத்தியதன் மூலம் புராதனகுளம் இருந்து அழிந்து போன தடயங்களை கண்டதுடன், இவ்விடத்தில் குளம் அமைப்பது பொருத்தமானது எனச்சிபார்சு செய்தனர். அதற்கு ஏற்றாற் போல் எப்படி யாயினும் இதனை கட்டிமுடிக்க வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டனர். ஆனால் நிதிபெறமுடியாததால் இத்திட்டம் அப்போது கைகூடவில்லை.

1999ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டக்கச்சேரி இராமநாதபுரத்தில் இடம்பெயர்ந்தசேவையை நடாத்தியபோது முன்பு செய்யப்பட்ட ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் புழுதியாறு மறிப்புத்திட்டத்திற்கான வரைபுகளை முன்வைத்தனர். இதனை அரச அதிபர் திரு. தி.இராசநாயகம் அவர்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டார். இதற்கானதிட்டம் தயாரித்தல்,விவசாயிகளை உற்சாகப்படுத்தல் செயற்பாடுகளில் அப்போதிருந்த தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் இணைப்பாளரும், வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளருமாகிய திரு. ரவி (விபுலேந்திரன்) அவர்கள் பெரிதும் உதவினார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி தொடர்ந்தும் மாவட்டவிவசாயக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதால் தொடர் நடவடிக்கைகளாக எடுக்கப்பட்டது.

(அடுத்தவாரமும் வரும்..)

---

## பன்முகம் - 21

# தன்னையே கெடுக்கும் பெருங்குணம்

**நாவண்ணன்**

**வந்தாரை** வரவேற்று வாழவைக்கும் பண்பாட்டில் சிறந்தது எமது நாடு. அதன் காரணத்தினால் தான் இன்று நாம் நமது இருப்பையே இழந்தவர்களானோம். விஜயனையும் அவனது உதவாக்கரை நண்பர்களையும் வரவேற்ற காரணத்தினாற்தான் ஈழத்தின் தொன்மைக்குடி நாம் என்ற பெருமையையும் இழந்து போனோம்.

ஒரு துளி இரத்தம் தானும் சிந்தப்படாமல் சுதந்திரம் பெற்ற நாட்டில், தொல் குடியாகிய நாம் எமது உரிமையை மடியேந்திப் பிச்சை போற் கேட்டும், சாத் வீகப் போர் நடாத்தியும் இன்று இரத்தம் சிந்தியும் பெற முயற்சித்துக் கொண்டுள்ளோம்.

இவை ஒரு புறமிருக்க எமது பிரச்சினையைப் பேசிக் கொள்ளுவதால் தமது அரசியல் வங்கிகளை நிறைக்கும் பேர்வழிகளும் இல்லாமலில்லை. அவர்களில் சிலர் நெருக்கடியான வேளைகளில் எம்மைக் காட்டிக்கொடுக்கும் பாவனையில் கொள்கையில் குட்டிக்கரணம் அடித்து எம்மை மறுதலிப்பதையும் கண்டுவிட்டோம். ஆனால் அதே வேளையில் எத்தனை இடர்வந்தாலும் எம்மையும் எமது விடுதலைப்போராட்டத்தையும் ஏற்றுக் கொண்டு எமக்காகக் குரல் கொடுக்கும் அயல் நாட்டில் வாழும் ஆதரவாளர்களை நாம் மறுப் பதற்குமில்லை.

இத்தனை பட்டறிவுகளைப் பெற்றிருந்தும் “பெருங் குணத்தால் கெட்ட பேயனுக்குப் பேர்தமிழன்” என்று பாடிய உணர்ச்சிக் கவிஞன் கவிதைவரி களுக்கு ஒப்பவே மீண்டும், மீண்டும் வாழ்ந்து கொண்டு மிருக்கின்றோம்.

போர் நிறுத்தம் பொருளாதாரத் தடைத்தளர்வு, புரிந்துணர்வு ஒப்பந்தம், A9 பாதை திறப்பு, போக்குவரத்து வசதிகள்.

என்று ஏற்பட்டபின்னர். சிறிலங்காவின் எந்தமூலை முடுக்குகளில் வாழ்பவர்களுக்கும் தமிழீழத்திற்கு பயமின்றி வந்து போகும் துணிச்சல் ஏற்பட்டுவிட்டது.

1956 க்கு முன்னர் கட்டுக் கலப்பினாலும், காணி பூமியினாலும் தொடர்புகளுடையவர்களால் இருந்த அவர்கள் வருகையை ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம்.

இடப்பெயர்வு காலத்தில் எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி எழுதியவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில் அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள். சுவரில் மோதிய பந்துகளாகிய அவர்களுக்கு மீண்டும் எமது காலடியில் விழுவதைத்தவிர வேறு வழியில்லை. என்றாலும் இடப்பெயர்வின் மூலம் தங்களை இனங்காட்டிக் கொண்டதனால் அவர்களும் எச்சரிக்கையாய் இருப்பார்கள். அவர்கள் மீதும் எச்சரிக்கையாகவும் இருக்கலாம்.

ஆனால் அன்புக்கரம் நீட்டி எம்மை அரவணைக்க வந்து அரவாய் அணைத்து ஆலகால விடத்தை உமிழ்ந்தவர்கள் நாட்டில் இருந்தும் சிலர் தம் பைகளை நிரப்பிக் கொள்ளவென்று இங்கு வருகின்றார்களே! அவர்கள் வருகிறார்கள் என்பதற்காய் அவர்களுக்கும் நிலபாவாடை விரித்து நாம் வரவேற்புக் கொடுக்கின்றோமே அந்த அவலத்தை யாரிடம் சொல்லி அழுவது?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேரைக் குற்றவாளிகளாகத் தீர்மானித்து அவர்களுக்குத் தூக்குத்தண்டனையென்று தமிழக நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியபோது, அங்குள்ள தமிழீழ ஆதரவு நெஞ்சங்கள் அத்தண்டனையை இரத்துச் செய்யக் கோரும் மனுவை ஒரு கோடி மக்களின் கைப்யொப்பங்களுடன் சமர்ப்பிக்கும் நோக்குடன் சில நடிகர்களை அணுகினார்களாம்.

அவர்களும் பிராமணிய ஆதிக்க பத்திகையாளரான நடிகரொருவர் “அந்த இரு பத்தியாறு பேர்களும் தூக்குக்கயிறுகளில் தொங்கவிடப்படும் போது எழுகின்ற ‘கிறீச்’ என்ற சத்தத்தைக் கேட்கக் காத்திருக்கின்றேனே ஒழிய இதில் கையொப்ப மிட மாட்டேன்” என்றாராம். இக்கருத்துக்கு வேறுசில தென்னிந்தியத் தமிழ் நடிகர்களும் ஆதரவு கொடுத்து தூக்குக்கயிற்றின் ‘கிறீச்’ ஓசை கேட்கும் ஆவலில் இருந்தார்களாம்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவரான பிரபல நகைச்சுவை நடிகர் ஒருவர் இப்பொழுது இங்குள்ள தமிழ் மக்களிடையே கலைவிபச் சாரம் செய்து காசு சேர்க்க வந்திருக்கிறாராம்.

இன்னுமொருவர் நகைச் சுவைப்பட்டி மன்றக்காரர் வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் நிதி உதவிக்காக அவருடைய பட்டி மன்றங்களை அங்கு ‘நடிக்கும்படி’ கேட்டபோது ‘தனது நிகழ்ச்சிகளால் திரட்டப்படும் நிதி புலிகளுக்குப் போய்விடும் என்று மறுத்தவராம்.

இவர்களுக்கெல்லாம் எமது ஈழ மண்ணில் கால்வைக்கவும் காட்சி காட்டிப் பிழைக்கவும் என்ன தகுதி இருக்கின்றது.

இத்தகையோர் தவிர ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு வழங்குவதில் பின்னிற்கும் சில தென்னிந்தியத் திரைப்படத்தயாரிப்பாளர்கள் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை தமது திரைப்படங்களில் சேர்த்துக் கொள்வதனால் அங்கு தமிழகத்துக்கு அகதியாய்ப் போனவர்களின் ஆதரவைப் பெறும் பட வியாபாரம் செய்கின்றனர். இங்கேயும் அவற்றில் சில திரையிடப்படுகின்றன. பணம் வசூலிக்கப்படுகின்றன. இவை கூட ஈழத்தமிழரை ஒரு விதத்தில் சுரண்டும் முயற்சியே.

இவர்களுக்கு எல்லாம் நாம் கொடுக்கும் ஆதரவானது மண்மீட்புப் போரில் தம்மை ஆகுதியாக்கிய மாவீரர்களின் தியாகங்களையும் இன்னும் போர் எழுந்தால் களமாடக்காத்து நிற்கும் போராளிகளையும் கொச்சைப்படுத்தும் செயல்களாகும்.

இன்னும் யுத்தநெருக்கடி மிகமோசமாக விருந்தகாலத்தில் இரத்த பூமியாகத் திகழ்ந்த வன்னிப்பக்கம் தலைவைத்துப் படுக்கவும் பயந்து தமிழர்கள் அல்லாத கலைஞர்களோடு சிறிலங்காவில் கூத்தாடியவர்களும், கலைப்பயணம் எனும் பெயரில் உலகவலம் வந்தவர்களும் கூட இன்று எமது அரங்குகளில் படமெடுத்து ஆடும் பம்மாத்துகளையும் காணுகின்றோம். இன்றைய இலகு நிலையில் மாற்றம் ஏற்படில் இவர்கள் எல்லாம் பாதுகாப்புத்தேடி பழையபடி தமது புற்றுகளில் புகலிடம் தேடிக்கொள்வர் என்பது நிச்சயம். இவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுப்பதானது “பெருங்குணத்தால் கெட்ட பேயனுக்குப்பேர் தமிழன்” என்ற கவிதைவரிகளையே நினைவுபடுத்துகின்றது. யுத்த நெருக்கடிக்குள் எம்மோடு நின்றவர்களான கலைஞர்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள் இவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படவேண்டிய இடம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

இதுவரைகாலமும் எம் போராட்டத்துடன் இணைந்து செயற்படத் தயங்கியவர்களையும், போராட்டத்தை மலினப்படுத்தியவர்களையும் இன்று எமக்கு ஆசான்களாக்கும் முயற்சியில் ஈடுபடுத்தும் துர்ப்பாக்கிய நிலைமை தொடரக் கூடாது.

அண்மையிலே உளவியல் நூல் ஒன்றில் படித்த குறுங்கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. நித்தம் மதுபோதையில் நிற்கும் ஒரு குடிகாரக் கணவனிடம் அவனது நண்பன் வந்து “உன் மனைவி விதவையாகி விட்டாளடா” என்றானாம் அது கேட்டு இந்தக் குடிகாரனும் “ஐயோ, ஐயையோ என் மனைவி விதவையாகி விட்டாளே” என்று சத்தமிட்டு அழுதானாம்.

தன் நண்பன் இறந்து விட்டதாகக் கூறியது தன்னைத் தான் என்பதை உணராமல் அழுத மது போதைக்காரன் போன்று இவர்கள் எல்லாம் கொச்சைப்படுத்தியது எம்மைத்தான் என்பதை உணராமல் வேறு எவருக்கோ நிகழ்ந்த சம்பவம் போன்று நாம் நடந்து கொள்வது ஆரோக்கிய மானது அல்ல.

---

உனக்கு மேலும் இன்பமான வாழ்வைத் தரவல்லது, அன்பு தான்; அன்பு மட்டுமே. - லுத்விக் பேத்தோவன்.



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம்

நாங்கள் மீண்டும் ஈராக்செல்வதற்கான நாளை எதிர்பார்த்திருக்கிறோம். ஈராக்கின் விமானசேவை இன்னமும் தொடங்கப்படவில்லை. அதை இந்த அமெரிக்கர்கள் தொடங்கி விட்டார்களென்றால் நாங்கள் போய்ச்சேர்ந்து விடுவோம். எனது மனைவியை இனியும் சமாளிப்பது கடினமென்று எனக்கு விளங்குகின்றது. அவள் யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து அழுதபடியே இருக்கிறாள். குழந்தை எதுவும் விளங்காமல் குழம்பியிருக்கிறது. இதில் எனது நிலைமையோ மோசமாகியிருக்கிறது. அவள் தனது சகோதரிகளையும் வயதுபோன தாய், தந்தையையும் நினைக்கும் போதெல்லாம் விம்முகிறாள். அழுது சாப்பிடாமல் அடம்பிடிக்கிறாள். எனக்கு நிலைமை விளங்குகிறது. தனது குடும்பத்திற்கு நாம் வஞ்சகம் செய்துவிட்டதாக அவள் நினைக்கிறாள். உல்லாசப் பயணம் என்று அவள் குழந்தையோடு என்னுடன் புறப்பட்டாள். அவள் இப்படி நேருமென்று எதிர்பார்த்திருக்கவில்லைத்தான். ஆனால் நான் அங்கு வைத்தே உள்ளதைச் சொல்லியிருந்தால் அவள் என்னுடன் புறப்பட்டு வந்திருக்கமாட்டாள். எனக்கோ எனது மனைவியையும் எனக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்ட ஒரேயொரு ஆண்மகனையும் பிரிந்துவிட நேருமென்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியாமல் போயிற்று. அதனால் தான் நான் உழைத்ததில் பெரும் பகுதியை செலவழித்தும், பொய்சொல்லி சிறிலங்காவிற்கு இவர்களை அழைத்து வரஆகியது. இதைவிட என்னால் செய்ய வேறு என்ன கிடக்கிறது. நீங்கள் சொல்லுங்கள்; நான் செய்தது தவறென்று நினைக்கிறீர்களா?

இப்படி என்னிடம் கேட்டார் யுத்தத்திலிருந்து தப்பிக்கொண்ட அந்த ஈராக்கிய குடிமகன். யுத்தத்திலிருந்து தப்பி கொழும்பில் கரையொதுங்கியிருக்கும் ஒரு ஈராக்கிய குடும்பத்தை அதிஷ்டவசமாக - ஆம். அதை அப்படித் தான் நான் சொல்ல வேண்டும். அது ஒரு அரிதான வாய்ப்பாகவே நான் வியந்து போகுமாறு அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. சந்திப்பில் நான் பெற்றுக் கொண்ட தகவல்களும் அப்படித்தான் இருந்தன.

40 வயதைக் கொண்ட மிக நெடிய தோற்றமும், பளுப்புநிறமற்ற வெள்ளைத்தோலும், கறுப்பு விழிகளும், ஐதாகவேனும் கறுப்புத்தலைமயிருமாக ஒரு ஆளுமையான தோற்றத்தோடு அவர் தெரிந்தார். சற்று வெளித் தள்ளியிருந்த வயிறு ஆளுமைத் தோற்றத்திற்குரிய கம்பீரத்தைச் சற்றுக் குறைக்கவே செய்தது. விசேடமாக அவரது மீசை அச்சொட்டாக சதாம்ஹுசைனின் மீசையை



பிரதிபலிப்பதாக இருந்தது. மிகவும் மென்மையாக இருந்த அவரது கைகளும், கால்களும் அவர் உடல் உழைப்பாளியல்ல என்பதைக் காட்டியது.

24 வயதுடைய அவரது மனைவி மிகவும் அழகாக இருந்தார். பளுப்பற்ற வெள்ளைத்தோலும் ஆனால் கீழைத்தேயத்தவர்களை யொத்த கறுப்பு விழிகளும், கருமைக்கூந்தலும், இளமை வயதுடைய ஒரு பெண்ணுக்கு இருந்து விட்டால் பொதுவிலேயே அழகு வந்து விடுகிறது. இவை பொருந்திவரக்கூடிய மரபணுவைக் கொண்ட -ஈராக்கியப் பெண்ணான அவருக்கு அவரது முகவெட்டும் கூர்மையான கண்களும் அவரை எடுப்பாகக் காட்டியது பார்வைக்கு அவரொரு ஒதுங்கற் பேர்வழியாக இருக்க வேண்டும் போல் தோன்றினார். அவரது அரிதான பேச்சும், பண்பான அணுகுமுறைகளும் அப்படி அவரை தோற்றப்படுத்தின.

அவர்களது ஒரேயொரு மகன் 'றிச்சட்' சுட்டிப்பையன். அவனது முக்கோண முகம் மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அவனுக்கு 5 வயதிருக்கும் பிறகு அவர்களுக்கு குழந்தையேதும் கிடைக்கவில்லையாம்.

சதாம்ஹுசைனைப் பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என அறிய ஆவலாய் இருந்தேன். ஆனால் ஆரம்பத்திலேயே அதைப்பற்றிக் கேட்கும் துணிவு எனக்கு வரவில்லை. "யுத்தம் வரப்போகிறது என்பதை நீங்கள் நிச்சயமாக எதிர்பார்த்தீர்களா?" என்று அவரிடம் கதையைக் கொளுவினேன்.

"இதிலென்ன ஆச்சரியம். அங்கு யுத்தம் வரப்போகிறது என்பது எல்லோருக்குமே தெரிந்துவிட்டது. நீண்ட காலமாகவே அங்கு இதை எதிர்பார்த்தோம். எனக்கு அரச அதிகாரிகளுடன் கொஞ்சம் நெருக்கம் இருக்கிறது. (சிரித்துவிட்டுக்கூறுகிறார்) அவர்கள்தான் யுத்தம் அமெரிக்கர்களால் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். இது எங்களுக்குப் புதிய செய்தி இல்லைத்தான் ஆனால் அவர்கள் சொன்னதோடு நான் பதற்றத்தை உணர்ந்தேன். அதன் பின்னர் தான் எனது மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு எங்காவது போய் விடுவதெனத் தீர்மானித்தேன்.

நாட்கள் தாமதித்தால் வெளியேறுவதோ, விசாஎடுப்பதோ கடினமாக இருக்கும் என்பதை அறிந்தேன். உடனே எனது குடும்பத்துடன் புறப்பட்டுவிட்டேன். உள்ளதைச் சொன்னால் மனைவியைச் சமாளிப்பது கடினமென்பதால் உல்லாசப் பயணம் என்றும், விரைவில் திரும்பலாமென்றும் அழைத்து வந்து விட்டேன். உல்லாசப் பயணமென்றால் பெண்கள் மறுக்கமாட்டார்களே" என்று கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

"எதற்காக இலங்கையைத் தெரிவு செய்தீர்கள் உங்கள் தப்புதல் முயற்சிக்கு?" என்றேன்.

**பிரவீன்**

"இந்த யுத்தம்வர இன்னும் 3 மாதங்களுக்கு மேலாகலாம் என்று தான் நான் நம்பினேன். எனவே நீண்ட காலத்திற்கு வெளி நாடொன்றில் இருக்க வேண்டு மாயின் எனது பொருளாதாரத் தளம் ஈடு கொடுக்க வேண்டுமே. இலங்கைக்கு நான் முன்பு வந்து போயிருக்கிறேன். எனக்குப் பரிச் சயமான நண்பர்களும் இருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக டொலரை மாற்றி இங்கு வாழ்வது சுலபம் என்று எனக்குத் தெரியும். மற்றது நான் முன்பு வந்தபோது இங்கு யுத்தம் நடந்தது. இப்பொ ழுது இங்கு சமாதானம் நிலவு கிறது. எனவே நான் இங்கு வருவதாக முடிவெடுத்தேன். யுத்தம் இங்கு இல்லாவிட்டால் இது மனஅமைதி தரும் பசுமையான நாடுஇல்லையா?" என்கிறார்.

உங்கள் தலைவர் சதாம் ஹுசைன் அமெரிக்காவை உறுதியுடன் எதிர்த்துப் போரிட்டு நாட்டையும் உங்களையும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வில்லையா?

(அடுத்தவாரம் வரை காத்திருக்க)

## மருத்துவம்

# கோடை வெயிலுக்கு வரும் அம்மை நோயை தவிர்க்கலாம்

கோடை வெய்யிலுக்கு வரும் அம்மை நோயைத் தவிர்க்கலாம். கோடைகாலத்தில் மட்டுமே வந்து கொண்டிருந்த அம்மை எனப்படும் வைசூரி நோய் இப்போது மற்ற சீசனிலும் வரத்தொடங்கிவிட்டது. இதற்கு சுற்றுச்சூழல் மாறுபடுதலே காரணம்.

இந்த நோய் எல்லா கோடை காலங்களிலும் மக்களைப்பாதிக்கும் என்று சொல்லிவிட முடியாது. பருவமழை தவறி அடியோடு வறண்டுபோன கடும்கோடையில் தான் இது அதிகம் பரவுகிறது. உடலின் வெப்பமும் சுற்றுப்புறவெப்பமும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் போது ஏற்படும் கோளாறுகளின் விளைவு தான் இந்நோய் தோன்ற முக்கிய காரணமாகிறது.

அசுத்தமான நீரைத்தொடர்ந்து பயன்படுத்தி வருதல், உடம்பை சரிவர சுத்தமாக வைத்திருக்காத நிலைமை ஆகியவையும் இந்நோயை வரவழைத்துவிடுகிறது.

இது தொற்றுநோய். மிக எளிதில் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு தொற்றிவிடும். உடம்பு குறித்த சில விசயங்களில் நாம்



கவனமாக நடந்து கொண்டால் இந்நோய் வராமலே பாதுகாத்துக்கொள்ளமுடியும். கோடை காலத்தில் அதிகாலையில் குளிப்பதை வழக்கமாக்கிக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்தால் உடலின் வெப்பம் கோடை வெப்பத்திற்கு ஈடுகட்டும் விதத்தில் அமையும்.

தினமும் குளித்ததும் சுத்தமான ஆடைகளைஅணியவேண்டும். "உடுப்புத்தான் அழுக்காக வில்லையே, இன்னொருநாள் போட்டுக்கொள்வோம்" என்கிற நிலையை விட தினசரி சுத்தமான உடை அணிவது அவசியம். மெத்தை தலையணை போர்வை போன்றவற்றை அடிக்கடி வெயிலில் உலர்த்தி பன்படுத்துவது நல்லது. குடியிருக்கும் வீட்டின் சுற்றுப்புறச்சூழல் அடுத்தது வீட்டோரமோ, வீட்டைச்சுற்றியோ குப்பை, கூழங்கள் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தண்ணீர் குடிநீரை வடிகட்டி நன்றாக கொதிக்க வைத்து ஆறிய பின் சுத்தமான மட்பாண்டத்தில் ஊற்றிவைத்து பருகி வரலாம். உடம்புச்சூடு அதிகப்படாமல் பார்த்துக்கொள்ளமுடியும்.

சிலர் அதிக காரங்களை உண்பவர்களாக இருப்பார்கள். கோடையில் இவர்கள் இந்த கார உணவைத் தவிர்த்துக்கொண்டேயாகவேண்டும். தேநீர், கோப்பி அதிகம் குடிப்பது நல்லதல்ல. இது வயிற்றின் கோளாறுக்கு வகைசெய்து அம்மைபோன்ற உஷ்ண நோய்களுக்கு இடமளித்துவிடக்கூடும். அடிவயிற்றில் மூலாதாரத்தில் ஏற்படும் கொதிப்புதான் இந்நோய்க்கான மூலகாரணம்.

பொதுவாக அம்மை நோய் வந்து விட்டாலே உணவைக் குறைத்துக்கொள்ளவேண்டும். உடலுக்கு இதமான குளிர்மை தரக்கூடிய இளநீர், தேசிக்காய் சாறு போன்றவற்றை அடிக்கடி பருகி வரலாம்.

அம்மைநோயின் வெம்மை தெரியாமல் இருக்க வேப்பிலை அரைத்து சுத்தமான நீரில் கலந்து உடலில் தெளிக்கலாம். சந்தணத்தை நீரில் கரைத்து தெளித்தாலும் வெம்மை குறையும்.

**சசி**

# சுய இலாபங்களிற்கு பொது நிதியா?



போரால் பாதிக்கப்பட்ட விடயங்கள் ஏராளமிருக்க போரால் ஏற்பட்ட அழிவுகள் மாறாதிருக்க- சிறிலங்காவின் தமிழ் அமைச்சரொருவர் தன் சுய அரசியல் லாபம் கருதி ஒரு மாவட்டத்துக்கான அமைச்சராக இருக்கிறார். அவர் ஒரு மாவட்டத்துக்கு அமைச்சராக இருக்கிறார் என்பதைவிட ஒரு ஊருக்கு அமைச்சராக இருக்கிறார் என்பது முக்கியமானது. யாழ் மாநகரசபையின் கடந்த கால உறுப்பினர்கள் யாழ் மாநகரத்தை கட்டியெழுப்பியதை விட தமது- உறவினர் களுக்கான வீதிகளுக்கு வீதிகளைச் சீரமைத்து ஆண்டு தோறும் திருப்பித் திருப்பி தார் ஊற்றியமையும் தமது சனசமூக நிலையங்களுக்கு மட்டும் மாடி கட்டியதையும் தவிர வேறுஎதுவும் நடைபெறவில்லை. போரால் அழிந்து அலங்கோலமாகக் கிடக்கும் யாழ் மாநகரின் தோற்றத்தையும் அந்த சில வீதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் யாழ் மாநகரசபையின் கடந்த கால உறுப்பினர். சபையின் பொதுச்சேவை வெளிவேடமும். மாநகரசபை என்ற பெரிய நிர்வாக அலகுக்கு வந்தவர்கள் செய்ய வேண்டிய வேலை இதுவல்ல. நகரமையத்தில் குப்பைகள் நிறைந்து நோய்கள் தாண்டவமாடிக் கொண்டிருந்த வேளை குப்பைகள் ஏன் அள்ளப் படாதிருக்கின்றன என்று கேட்டபோது அதற்கு வாகனம் இல்லை என மாநகரசபை முன்னாள் மேயர் தான் பதவி யிலிருக்கின்ற போது கூறினார். ஆனால் நகரம் குப்பைகளால் நிறைந்திருக்க போராட்டம் நடத்தி அரசிடம் ஒரு முச்சக்கர ஊர்தியை அந்த மேயர் வாங்கினார். தனது கிராமத்துக்கான சாலைக்கு மேல் சாலை போட்டார்.

அது நடந்து முடிந்த கதை இப்பொழுது புதிய கதை சிறிலங்கா அரசில் அமைச்சுப் பொறுப்பேற்ற யாழ்ப்பாணத்தவர் ஒருவரின் பணியும் அதுவாகவே இருக்கின்றது.

சிறிலங்கா அரசால் ஒரு விவகாரத்துக்கு அமைச்சராக் கப்பட்ட இவர் தனது ஊருக்கும் தனது மாவட்டத்துக்கும் அமைச்சராக உள்ளார். இதைவிட ஒரு மாநாடு ஒன்றை நடத்திய விடயம் மற்றொன்று.

அந்த அமைச்சர் மக்கள் தொகை மிகக்குறைந்த 8 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு ஒரு உதவி அரச அதிபர் பணிமனை உருவாக உழைத்துள்ளார். குடா நாட்டில் மக்கள் தொகை செறிந்த நகரத்தை அடக்கிய யாழ் நல்லூர், கோப்பாய் உதவி அரசஅதிபர் பிரிவுகள் கூட பிரிக்கப்படவில்லை. காரைநகரோ வீதித்தொடர்பில் லாத கடலால் பயணம் செய்ய வேண்டிய மிகத் தொலைவு இட மல்ல. இது ஊர்காவற்துறை உதவி அரசஅதிபர் பிரிவுக்குள்ளாகவும் அண்மையாகவும் உள்ளது. நெடுந்தீவு மிகத்தொலைவிலுள்ளதால் அது தனி உதவிஅரச அதிபராகவுள்ளமை நியாயமான விடயமாகும். ஆனால் மக்கள் தொகை செறிந்த மேலும் உதவி அரசஅதிபர் பிரிவுகளாக்கப்பட வேண்டியவை பிரிக்கப்படவில்லை. ஆனால் தேவைக்கும் மீறி அமைச்சரின் சொந்த ஊர் என்பதற்காக காரைநகர் தனி உதவி அரச அதி

**த. திருநிலவன்**

பர் பிரிவாக்கப்பட்டுள்ளது. வன்னியில் மிகுந்த தொலைதூரம் காரணமாகவும் சனத்தொகை காரணமாகவும் கிளிநொச்சியில் இரு உதவி அரசஅதிபர் பிரிவுகளை உருவாக்க விடுத்த வேண்டுகைகள் சிறிலங்கா அரசால் நிராகரிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஒரு அமைச்சரின் அடுத்த தேர்தல் வாக்கு லாபத்துக்காக இந்த புதிய உதவி அரசஅதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

அடுத்தது இந்த அமைச்சரின் அமைச்சு விவகாரம். இவர் யாழ் மாவட்ட கோவில்களுக்கு மட்டுமே அமைச்சராக இருக்கிறார் போலும். யாழ் மாவட்ட கோவில் களுக்கு முச்சக்கர ஊர்திகளை வழங்குகிறார். தொலைபேசி இணைப்புகளை வழங்குகிறார். நாள்தோறும் அன்னதானம் வழங்க நிதி தருகிறேன் என்கிறார். இப் படிச் செய்யும் அமைச்சரிடம் யாழ்.தீவக கோவில் ஒன்றியத்தினர் தமக்கு முச்சக்கரஊர்தி வேண்டாம். தொலைபேசி வேண்டாம். நாள் தோறும் அன்னதானம் வழங்க நிதி வேண்டாம். எமது கிராமத்து இளந்தலைமுறையினர் அறிவு வளர ஒரு நூலகத்தை கோயிலிற்கான பேரில் அமைத்துத் தாருங்கள் என வேண்டினர். அதற்கு அமைச்சர் உங்கள் ஊரில் எத்தனை மனிதர்கள் இருக்கின் றனர் எனக் கேட்டுள்ளார். உண்மை யில் தீவகத்தில் மக்கள் தொகை கூடியதாக உள்ள கல்விச்சாலையை கொண்டதாக அந்தக் கிராமமே உள்ளது. அதைவிட அமைச்சரின் ஊர் தனி உதவி அரசஅதிபர் பிரிவாக்கப்பட எத் தனை மனிதர்கள் உள்ளார்கள் என்பதை அவர் யோசிக்க வேண்டும்.

மற்றும் கோவில்களுக்கு வழங்கப்பட்ட முச்சக்கர ஊர்திகளோ தொலைபேசிகளோ எந்த சமூகபொதுச் சேவைக்கும் பயன் படுவதில்லை. இந்த முச்சக்கர ஊர்தி, தொலைபேசிகளுக்கான செலவு யாழ் திக்கம் வடிசாலையின் பனந் தொழிலாளர்களின் இரத்தமும் வியர்வையும் சிந்திப் பெறும் வருமானத்தில் மேற்கொள்ளப் படுகிறது. திக்கம் வடிசாலையின் பரிதாபம் அது. முன்னர் EPDP தேச விரோதக்குழுவினரால் ஆக்கிரமிக் கப்பட்டு சுரண்டப்பட்ட திக்கம் வடிசாலைபிறகு தற்போதைய அமைச்சரிடம் கைமாறியது. இப போது திக்கம் வடிசாலையின் உழைப்பு கோயில்களுக்கு முச் சக்கர ஊர்திகளாகவும், தொலை பேசிகளாகவும் எதிர்கால தேர்தல் வாக்குகளுக்காக மாறுகின்றன. திக்கம் வடிசாலை ஊழியர்களோ நாளாந்தம் தமது பழைய நிர்வா கத்திடம் அதனை ஒப்படைக்கப் போராடுகின்றனர். திக்கம் வடிசாலை ஊழியர் வாழ்வோ பரிதாபம்.

வன்னியில் ஏராளம் கோவி ல்கள் போரால் அழிந்து கிடக் கின்றன. ஆனால் அவற்றுக்கு எது வித உதவிகளும் குறித்த அமைச் சரால் கிடைத்ததாகத் தெரிய வில்லை. முறிகண்டிப்பிள்ளையார் கோயிலை கட்டுவதற்காக அவர் புறப்பட்டபோது ஆலயநிர்வாகத்தினர் அதனைத் தடுத்தனர். ஆலயத் துச்சூழலை வளம்படுத்தி அதனை ஒரு சிறுநகராக்க உதவுங்கள் என 150 லட்சத்துக்கு சிறந்த திட்ட மொன்றை ஆலய நிர்வாகத்தினர் வழங்கினர். ஆனால் 3 லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. அதுவும் மலசலகூடம் மட்டும் அமைக்கப் போதுமாக இருந்தது.

இப்படி ஊருக்கும், மாவட் டத்துக்கும் அமைச்சராக இருக்கும் அவர். 2ம் உலக இந்துமாநாட்டை கொழும்பில் கோலாகலமாக நடத் தினார். 1974இல் உலகத் தமிழா ராட்சி மாநாட்டை கொழும்பில் நடத்த மேற்கொண்ட முயற்சிக்கும்- இந்து மாநாடு கொழும்பில் நடந்ததுக்கும் இடையே என்ன மாற்றம் உள்ளது.

ஆக சுயலாபங்களுக்காக பொது நிதியை அமைச்சர் வீணே இறைக்கின்றார் என்பதே முக்கிய செய்தி. போரால் அழிவுற்றமக்கள் எதுவித அபிவிருத்தியுமில்லாமல் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றனர்.

# பெண் விடுதலைக்கு பெண்களே தடையாகலாமா?

பெண்ணுரிமை பெண் விடுதலை, பெண் சமத்துவம் என்ற சொற்ப தங்கள் இப்போது எல்லா ஊடகங்களிலும் எல்லாமேடைகளிலும் ஒலிப்பது ஒரு ஆரோக்கியமான நிலைப் பாடேயாகும்.

எழுத்தாளர்களும் தமது படைப்புகளில் பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை முன் வைக்கின்றனர். போதாதற்கு பெண் விடுதலை தொடர்பான அமைப்புகளும் பல்கிப்பெருகி யுள்ளன. சர்வதேச பெண்கள் விடுதலை தினத்தில் தலைநகரில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த அப்படியான ஒரு அமைப்பினால் ஒழுங்கு செய் யப்பட்ட நிகழ்வில் பெண்களும் சமூகப்பணிகளும் என்ற தலைப் பில் உரையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தலைநகரில் மேற்தட்டு, மேல் நடுத்தட்டு வர்க்கப்பெண்கள் பெரும் எண்ணிக்கையிலும் சில ஆண்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பெண்ணின் உயர் வுக்கு பெண்ணே எதிரியாக இருக்கும் நிலை பலராலும் எடுத்துக்கூறப்பட்டது.

ஆறேலு வருடங்களுக்கு முன் னர் வன்னியில் நடந்த சர்வதேச மகளிர் தின விழாவில் உழைக் கும் மகளிர் அமைப்பின் சார்பில் உரையாற்றிய நிகழ்வையும் இந்த நிகழ்வையும் ஒப்பிட்டு நோக்கிய போது பெரிய ஒரு வேறுபாட்டை என்னால் அவதானிக்கமுடிந்தது. வன்னி யில் நடந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பெண்கள் வன்னிப்பெருநிலப்பரப்பின் பல முனைகளிலிருந்தும் வந்து கலந்து சிறப்பித்திருந்தார்கள். இந்த நிகழ்வை ஒழுங்கு செய்தி ருந்த தமிழர் புனர்வாழ்வு கழகம் சமூகத்தின் அடித்தட்டு மக்களை யும் கலந்துசிறப்பிக்கவைத்தி ருந்தமை பாராட்டுக்குரியதாகும். தலைநகர் நிகழ்வு ஒரு மண்டபத் திலும் வன்னி நிகழ்வு ஒரு பெரிய மைதானத்திலும் நடந்தேறின. பெண்களின் விடுதலை தொடர்பான எத்தனை அமைப்புக்கள் இருந்தாலும் அவை எந்தளவுக்கு செயற் படுகின்றன என்பது முதலாவது கேள்வியாகும். அடுத்து இவ்வமைப்புகளின் பக்கச்சார்பு தன்மை பற்றியதாகும். இப்படி யான அமைப்புகள் இனமத அரசியல் வேறுபாடுகளைக் கடந்து செயற்படவேண்டும். அடுத்து அவசியமான வேலை களில் துரிதமாகக் குரல் கொடுப்பதோடு பாதிக்கப்பட்ட வர்களைச் சந்தித்து உண்மை நிலைமைகளை அறிந்து உடன் பரிகா ரம் காண முன்வர வேண்டும். பெண்கள் படையினரால் பாலு ணர்வு இம்சைகளுக்கு உள்ளாக்கப்படும் சம்ப வங்கள் எமது நாட் டிற்கும் புதியதல்ல.



இப்படியான சம்ப வங்களைக் கண்டித்து எத்தனை அமைப்புக் கள் குரல் கொடுத்தன. குரல் கொடுத்த அமைப்புக்கள் கூட அத்தோடு தம் பணி முடிந்துவிட்டது போல வாழாவிருக்கின்றன. அப்படி யாயின் இந்த அமைப்புக்களின் அர்த்தம் தான் என்ன? வெறும் சுயவிளம்பரம் மட்டுமா? எமது தமிழ் பிரதேசங்களுக்கு வந்தால் இராணுவக் கொடுமைகளை மிஞ்சுமளவுக்கு சீதனக் கொடுமை தலைவிரிதாடுகிறதைப் பார்க்கலாம். அதிலும் வெளி நாட்டுப் பணம் குவியத் தொடங்கிய பின்னர் சீதனச்சந்தை யிலே விலை போக முடியாத பல ஏழைக்கன்னியர்கள் முதிர் கன்னிகளாக பெருமூச்சு விடுகின் றனர். இந்த அவலநிலைக்கு யார் காரணம்? ஆணாதிக்க சமூகத்தில் உள்ள நாம் ஒவ்வொரு வரும் தான்! குறிப்பாகப் பல பெண்களே பெண்களுக்கு எதிரியாக இருப்பதுதான் சாபக்கேடு. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் எமது சமுதாயத்தில் மாப்பிள்ளையின் அம்மாமாரும் சகோதரிகளும் இரங்கவே மாட்டார்கள். ஏன் இந்த அவல நிலை. வாழத்துடிப்பதும் தம்மைப் போல் ஒரு பெண்ணே என ஏன் இவர்கள் நினைப்பதில்லை.

மேலும் எமது சமூகத்தில் பெண்கள் மத்தியில் பொறா மையும் மோதல்களும் அதிகம். பொதுவாக பெண்களோடு பெண்கள் ஒத்துப் போவதில்லை. ஆண்களோடு ஒத்துப்போகும் பெண்கள் பெண்களோடு முரண்பட்டுநிற்பது விந்தை யானது. பெண்ணை அடக்கி வைப்பதிலும் பெண்களே ஆண் களைவிட மோசமாக உள்ளனர். பரம்பரைபரம்பரையாக வந்த பண்பாட்டு போலிகளின் எச்சங் களை காத்து நின்று பெண்ணைத் தொடர்ந்து அடக்கி வைப்பதில் பெண்களே முழு மூச்சாக நிற் கின்றனர். இந்த நிலை முற்றாக மாறிட வேண்டும். பாரதி கண்ட புரட்சிப்பெண்களை தமிழீழ மண்ணில் தரிசிக்க முடிகிறது. வெறும் ஆயுதத்தை தூக்கு வதால் மட்டும் நான் இதை கூறவில்லை. அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியா னது பெண்விடுதலை இங்கு கைக்கெட்டும் தூரத்திலேயே நிற்கின்றது என்று கட்டியம் கூறு கிறது. மலரப்போகும் தமிழீழ த்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அனுப விக்காவிட்டால் நாம் பெறப் போகும் விடுதலை அர்த்தமற்ற தாகிவிடும்.

**-சந்திரகாந்தா-**

இன்றைய நாள் தான், நமக்கு என்றுமே மிக அற்புதநாளாய் அமைய வேண்டும். - தாமல்ட்ரீஸர்

# தொடர்புகளுக்குச் செய்மதி

லண்டனிலிருந்து சிங்கப்பூருக்கு அல்லது நியுயோர்க்கிற்கு வியாபார விடயமாகப்பயணம் செய்யும்போது அவசரமாக லண்டனின் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் அதற்கு வசதியுண்டா? ஏன் இல்லை? இருக்கவே இருக்கிறது செய்மதி. தகவலை எடுத்துச் செல்ல. அட்லாண்டிக் சமுத்திரத்தின் மத்தியில் கப்பலில் பயணம் செய்யும் போது சுகயீனமாக இருந்த தந்தை எப்படி இருக்கிறார் என்று அறிய அவருடன் கப்பற்பிரயாணி தொடர்பு கொள்ள முடியுமா? ஏன் முடியாது? இருக்கவே இருக்கு உதவிக்குச் செய்மதி. அதே போன்று மக்கள் சஞ்சாரம் இல்லாத பாலைவனம், அடர்ந்த காடுகள் ஆகிய இடங்களிலும் இருந்து செய்மதி மூலம் தொடர்பு கொள்ளலாம். அண்மையில் நடந்த ஈராக் யுத்தத்தை அருகில் இருந்து பார்ப்பது போன்ற உணர்வு எமக்கு இருந்தது. உயிரைப் பணயம் வைத்து ஊடக நிருபர்கள் செய்திகளை இராப் பகலாய் தொலைகாட்சி மூலம் தந்த வண்ணம் இருந்தார்கள். அது மட்டுமா VIDEO PHONE என்ற முகத்தை தொலைக்காட்சித்திரையில் பார்த்தபடி தொலைபேசியில் பேசும்



தொழில்நுட்ப முறைமூலம் நாம் செய்திகளைப் பாலைவனத்திலிருந்தும் பெற்றோம். இவையெல்லாவற்றிக்கும் கரு செய்மதி. யுத்தம், இயற்கையின் அழிவுகளான வெள்ளம், பூகம்பம் சூறாவளி போன்றவை பற்றிய உடனுக்குடனான தகவல்களை மக்களுக்கு படம் பிடித்துக் காட்ட செய்மதி உதவுகிறது. தரமுள்ள விலை குறைந்த தொலைத்தொடர்பு சேவையை செய்மதி மூலம் மக்கள் பெறுகிறார்கள்.

செய்தி சமிஞ்கைகளை (Signals) செய்மதியூடாக உலகத்தைச் சுற்றிவர அனுப்ப முடியும் என்ற தத்துவத்தை 1945 ஆதர்சீகிளார்க் (Arthur C Clark)என்ற விஞ்ஞான எழுத்தாளர் தனது கட்டுரை ஒன்றில் விளக்கி எழுதினார். பிரித்தானியாவில் இருந்து வெளிவந்த வையர்லஸ் உலகம் என்ற சஞ்சிகையில் இது வெளிவந்தது. இக் கட்டுரையில் ஒரு செய்மதியை வான்வெளியில், பூமியின் மத்திய ரேகைக்கு மேலாக 36,000 கி.மீ. தூரத்தில் சுற்றி வர தேவையான வேகத்தையும் சக்தியையும் கணித்து எழுதினார். செய்மதி பூமியின் புவியீர்ப்புச் சக்தியில் இருந்து விடுபட்டு வானத்தில் மிதக்க மிகக் குறைந்தது செக்கனுக்கு 7 மைல் வேகத்தில் மேலே உந்தப்படல் வேண்டும். செய்மதி வானத்தில் மிதப்பது புராணத்தில் வந்த திரிசங்கு சுவர்க்கம் கதை போன்றது. ஒரு வேளை ஆதர் சீகிளார்க் அக்கதையைப் படித்த பின்னர் அக் கட்டுரையை எழுதினாரோ என்னவோ! இவர் தற்போது இலங்கையில் வசிப்பது கவனத்துக் குரியது.

காரணம் பூமத்திய ரேகைக்கு அருகாமையில் உள்ள நாடுகளில் ஒன்றான இலங்கை வான்வெளி பரிசோதனைகளுக்கு உகந்த இடம் எனக் கருதியபடியாலோ என்னவோ அதைத் தெரிந்து எடுத்திருப்பாரோ?

பூமியின் கோண வேகத்துக்கு சமனாக இச்செய்மதி சுழலுமாகில் பூமியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அச்செய்மதி நிரந்தரமாக ஒரு இடத்தில் இருப்பது போன்று தோற்றமளிக்கும். இது செல்லும் சுழல் பாதை Orbit யை பூமிசார்பான நிரந்தரப்பாதை எனவும் அதை ஆங்கிலத்தில்(Geostationary Orbit) எனவும் கூறுவர்

இது பூமியில் இருந்து சுமார் 35786 கி.மீ உயரத்தில் பவனிவரும். 1957ல் சோவியத் யூனியன் ஸ்புட்னிக்கை வானத்தில் மிதக்கவிட்டு இத்தத்துவத்தை நிரூபித்தது. 1959ல் இங்கிலாந்தில் இருந்து மேலே அனுப்பிய வானொலி சமிக்கைகள் சந்திரனில் தெறித்து திரும்பவும் 3 நிமிடங்களில் MASSACHWUSETTS என்ற அமெரிக்க மாநிலத்தில் உள்ள கேம்பிரிட்ஜ் நகரை அடைந்தது. 1962 டெல்ஸ்டார் என்ற செய்மதியை பூமியில் இருந்து 950 கி.மீக்கும் 5600 கி.மீக்கும் இடைப்பட்ட தூரத்தில் வானத்தில் மிதக்கவிட்டு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள பரிவர்த்தன நிலையங்களிடையே தொடர்புகொள்ள முடிந்தது. இதைத் தொடர்ந்து 1974 இல் பிரான்சும் ஜேர்மனியும் 1979இல் கனடாவும் 1977ல் இத்தாலியும் யப்பானும் 1981இல் இந்தியாவும் செய்மதிகளை தொலைத் தொடர்புக்காக வானத்தில் பறக்கவிட்டன. 1965இல் விடப்பட்ட ஏர்லிபோட் என்ற செய்மதி 40கி.கிராம் நிறையும் 240 தொலைஅழைப்புகளை ஒரே நேரம் பேசக்கூடியதாக இருந்தது. 20 வருடங்களுக்குப்பின் வானத்தில் விடப்பட்ட இன்டெல்சட் 6 என்ற செய்மதி 2180 கிலோ கிராம் நிறையும் 33,000 தொலைத்தொடர்பு சுற்றுக்களையும் கொண்டது. ஏழாவது பரம்பரையைச் சேர்ந்த இன்டெல்சட் ஏழு என்ற செய்மதி முன்னையதை விட சிறிதளவு பாரம் கூடியதாயினும் 200,000 தொலைத் தொடர்பு சுற்றுக்களை கொண்டதாகயிருந்தது, செய்மதிகளை வான்வெளியில் மிதக்க விடுவதற்குப் போதிய மூலதனம் தேவை. அதனால் சில நாடுகள் குழுக்களாய் சேர்ந்து பணத்தை முதலீடு செய்து செய்மதியை வானில் மிதக்கவிட்டு அதில் இருந்து பயன்பெற்றன. 1971 இல் சோவியத் யூனியன் இன்டர்ஸபுட்னிக் ஸ்தாபனத்தை 14 நாடுகளின் கூட்டுடன் ஆரம்பித்தது, சோவியத் யூனியன் அரசியல் காரணங்களால் இன்டெல்சட் ஸ்தாபனத்தில் அங்கத்தினராக இருக்கவில்லை. வட அமெரிக்கா பெரியநாடானதால் இன்டெல்சட் மூலம் வெகுதூரத்தில் உள்ள நகரங்களான டலஸ்- சிக்காகோ போன்ற நகரங்களிடையே தொடர்புக்காக பாவிக்கப் பட்டது. தொலைபேசி, தகவல்கள், தொலை நகல்கள் அனுப்பவும் பாவிக்கப்பட்டது. 1977ல் EUTLASTஎன்ற செய்மதி ஸ்தாபனத்தை 17 ஐரோப்பிய நாடுகள் தோற்றுவித்தன. இதையடுத்து 21 நாடுகளைக் கொண்டு அரப்சட் என்ற ஸ்தாபனம் அரேபிய நாடுகளால் உருவாக்கப்பட்டது. 1976 சிதைந்து கிடக்கும் தமது சுமார் 5000 தீவுகளுக் கிடையே தொடர்பை ஏற்படுத்த இந்தோனேசியா பலப்பா என்ற ஸ்தாபனத்தை தோற்றுவித்தது. 1982 அவுஸ்ரேலியா அவுஸ்டட் என்ற பெயரில் ஒன்றை தோற்றுவித்தது.



தொலைக்காட்சி சேவைக்கும் செய்மதி பாவிக்கப்பட்டது. நேரடியாக வீடுகளுக்கு சேவை கொடுக்கப்பட்டது. வெகுதூரம் செல்லும் வாகனங்கள் தமக்கிடையே தொடர்பு கொள்ளவும் , நடுக்கடலில் செல்லும் கப்பல்கள் தமக்கிடையே தொடர்பு கொள்ளவும் செய்மதி உபயோகமாயிருந்தது. விமானப்போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ரயில் போக்குவரத்து ஆகிய வற்றிற்கும் செய்மதி பாவிக்கப்படுகிறது. கனடாவில் இருந்து கொழும்புடன் பேசும்போது செய்மதியூடாக தொலை பேசித்தகவல்கள் செல்கின்றன. செய்மதி பலவிதமான சேவைகளுக்குப் பாவிக்கப்படுகிறது.

-வானொலி சேவைக்கு
- தொலைக்காட்சி சேவை
- தொலைத்தொடர்பு சேவை
- தகவற் FONT CLASS "EBODY" (DATA) சேவை
- கப்பற்போக்குவரத்து சேவை
- விமானப் போக்குவரத்து சேவை
- பூமிக்கு அடியில் இருப்பதை ஆராய்ச்சி செய்யும் சேவை
- காலநிலைகளைப் பற்றிய ஆராய்ச்சிக்கும் தகவல்களுக்கும்.

பெரும்பாலும் ஒரு தொலைபேசி எண்ணுடைய கையுக்குள் அடக்கமான தொலைபேசியுடன் உலகம் எல்லாம் சுற்றும்போது இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடியதாயிருக்குமளவுக்கு தொழில்நுட்ப முன்னேற்றம் அடைந் துள்ளது. இரிடியம் ஸ்தாபனம் பூமியின் 86 விகிதமான பகுதிகளுக்கு இச் சேவையைக் கொடுக்கிறது என அறிவித்துள்ளது. ஆனால் சேவைக் கேற்றவிலையுண்டு.

பொன்

## வாசகர் கடிதம்

வணக்கமும் நல்வாழ்த்துகளும்.

'வெள்ளிநாதம்' 28.03.2003. இதழ்படித்தேன். லேஅவுட்- உள்ளீடு அனைத்தும் சிறப்பாகவிருந்தது. சிறிலங்காவை மீட்பது தொடர்பான கட்டுரை யதார்த்தமானது.

அதைவிடவும் ஈராக்போர் தொடர்பான தங்களின் ஆசிரியர்தலையங்கம் கருத்தாழமிக்கது. சகல அடக்குமுறைகளினின்றும் விடுதலை பெறுவதே மனித வாழ்வின் மேன்மை.

அந்தத்தருணத்தின் தரிசனத்திற் கானதே நமது வாழ்வும் நமது தேடலும்.

அந்தத் தலையங்கத்தை இவ்வளவு சிறப்பாக எழுதிய கரங்களை - மெய்சிலிர்க்க முத்த மிடுகிறேன். வாழ்த்துகிறேன்.

ஈழத்துச் சிறுகதை வரலாறு நூல் பற்றிய சுதந்திர தீபனின் கட்டுரையைப் படித்ததும் 'தமிழில் சிறுகதை சிட்டியும், சிவபாத சுந்தரமும் எழுதிய நூல்ஞாபகம் வந்தது. ஆனானப்பட்ட விந்தனையே கை நழுவி விட்டு அந்த மகான்கள் இருவரும் சிறுகதை வரலாறு எழுதியிருந்தார்களென்றால் நம்ம செங்கையாழியனைப் பற்றி என்ன சொல்லயிருக்கிறது.

ஜெயகாந்தனுக்கும் அரைப்பக்கம் ஒதுக்கியிருந்தீர்கள். எனக்கு வியப்பாகயிருந்தது. 90களின் நடுப்பகுதியில் ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள அவரின் ஆசிரமத்தில் சந்தித்து உறவாடியபோது - இலக்கியம் அரசியல், வரலாறு, பாபர்மஸ்ஜித் - முஜிபுர்ரஹ்மான் பிரபாகரன்- பத்மநாபா, தமிழ் சினிமா , பண்டாரநாயக்கா, கருணாநிதி - ஜெயலலிதா - தமிழறிஞர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் என்று எங்கள் உரையாடல் பற்றிப்படர்ந்தது.

ஜேகேயின் சிம்மக்குரலும் ஆளுமையும் என்னை அதிரவைத்தது. பிரபாகரன் பற்றிய அவரின் எண்ணங்கள்... இப்பொழுதும் எனது செவிப்பறைகளின் குருத்துகளைத் தகர்த்து....

'ஜெயகாந்தனைக்கண்டேன்!' என்று ஒரு தொடரை எழுதும் எண் ணத்துடன் மீண்டேன். இருந்தாலும் காலத்தின் கோலமறிந்து கைவிட்டு விட்டேன்.

உங்கள் வெள்ளி நாதத்தில் தொடருவோம?

வாழ்த்துக்களுடன்:-
எஸ்.எல்.எம் .ஹனீபா
.ஓட்டமாவடி.

## ஈழத்து தமிழர் நூல் கண்காட்சி 2003

ஈழத்து புலம் பெயர் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களைக்கொண்ட ஈழத்து தமிழ் நூல் கண்காட்சி-2003ல் லண்டனில் மிக விரைவில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சிக்கு அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம் கவிதை, திரைப்படப் பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப்பதிவுகள், சிறுசஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு என விரியவுள்ளது இக் கண்காட்சி.

ஈழத்திலிருந்தும் ஆக்ககர்த்தாக்கள் தமது படைப்புக்களை இக்கண்காட்சிக்கு அனுப்பிவைக்கலாம்.

R.MAHENDRAN
34 REDRIFF ROAD
PLAISTOW
LONDON . E13 OJX ,U.K
Tel:-0044 2085867783

மேற்படி முகவரிக்கு ஈழத்து எழுத்தாளர்கள் தொடர்பு கொள்ளலாம்.


நாளைக்கு ஒரு புதிய புத்தகம் வெளிவருகிறது.



ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புகள்

கருணாகரனின் கவிதைகள் புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணியவித்தியாலயத்தில் 24.05.2003 பின்நேரம் 3.30 மணிக்கு கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நிகழும் வெளியீட்டு விழாவில் திரு. பொன்தியாகம்,திருமதி. தில்லைநாயகம், நிலாந்தன், வே.பாலகுமாரன், செ. முகுந்தன், கவிஞர் இ.முருகை யன், முல்லைக் கோணேஸ் ஆகியோருடன் உங்களையும் வரவேற்கிறோம்.

அழைப்பது
கருணாகரனும்
இலக்கியநண்பர்களும்
(சி-7877)

# நேர்நோக்கு

## மாறிவரும் சூழல்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான "சகவாழ்வு" அரசியல் அநேகமாக முடிவுக்கு வந்துவிட்டது. நாட்டில் சமாதான நடவடிக்கைகள், பொருளாதாரம் என்பவை இந்த அதிகாரப் போட்டியால் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற எச்சரிக்கை இவ் இருவராலும் கவனத்திற் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஜே.வி.பியுடனான கூட்டு நெருங்கிவருவதாக வெளிவரும் தகவல்கள் ஆட்சிக் கவிழ்ப்புப்பற்றி விடப்படும் சவால்கள், பொதுத் தேர்லுக்கான தயாரிப்புகள் என்பன புதியதொரு சூழல் உருவாகி வருகின்றமையை வெளிப்படுத் துகிறது.

இந்த் சந்தடியில் தென் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அழிவுகள் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு, ரோக்கியோ மாநாட்டில் ஏற்படப்போகும் பாதிப்புகள் என்பன அரசியல் வாதிகளின் கவனத்தை ஈர்க்கவில்லைப் போலவே தெரிகிறது. அவர்களின் கவனம் முழுக்க இந்த அதிகாரப்போட்டியில் திசை திரும்பி விட்டதையே செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் கதிர்காமர் ஆகியோரின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறுவதும், சனாதிபதியின் பாதுகாப்புக்கான உயர்பாதுகாப்பு வலயத்தை காலி முகத்திடல் வரை விரிவாக்கக் கோருவதும் சனாதிபதி சந்திரிகாவின் கவனம் உள்துறை அமைச்சு மீது வீழ்ந்துவிட்டதையே காட்டுகிறது. உண்மையில் சனாதிபதியின் பாதுகாப்பு இப்பொழுதும் அவரின் கீழ் உள்ள சனாதிபதி பாதுகாப்புப்பிரிவின் கீழ் இருக்க, இன்னமும் தனது பாதுகாப்பைக் குறித்துப் பிரஸ்தாபிப்பது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த தேர்தலில் கொழும்பிலுள்ள இராணுவ வீதித்தடைகள் நீக்கப்படும் என ஐ.தே.க வாக்குறுதி வழங்கியிருந்தது. அந்த வாக்குறுதியை மீற முடியாது என ஐ.தே.க பிடிவாதமாக இருப்பின் தனது பாதுகாப்புக்கு குந்தகமென அலறுவதே சனாதிபதியின் நோக்கமாகும்.

இவ்வாறு முக்கியமான ஓர் அமைச்சு மீது சனாதிபதியின் கவனம் திரும்பியிருப்பது தேர்தலை நோக்கி சிறிலங்கா சென்று கொண்டிருப்பதையே காட்டுகிறது. தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முன்னர் உள்துறை அமைச்சு- அதன்மூலம் பொலிஸ் திணைக்களத்தைத் தம்வசப்படுத்தவும் ஊடகத்துறை அமைச்சை கைப்பற்றி ஊடகங்களைத்தமது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தவும் சனாதிபதி முயலக்கூடும்.

இந்த அதிகாரப் போட்டியில் பெரிதும் சோதனைக்கு உள்ளாகப்போவது சமாதான நடவடிக்கைகள் தான். ஆரம்பமுதலே சமாதான நடவடிக்கைகளைச் சந்திரிகா எதிர்த்து வருவதைக் காரணங்காட்டி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாது ஐ.தே. முன்னணி அரசாங்கம் இழுத்தடித்து வருகிறது. அத்துடன் பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்டமுடிவுகள் பலவற்றையும் அது இதுவரை நடை முறைப் படுத்தவில்லை.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொடுத்துவரும் நெருக்கடியினை ஐ.தே.மு. அரசாங்கம் இவ்விடயத்தை மேலும் தாமதப்படுத்த காரணமாக முன் வைக்க வாய்ப்பாக இருக்கும். மேலும் அதிக ஒப்பந்தமீறல்கள் ஏற்படவும் கூட வாய்ப்புகள் உண்டு.

எவ்வாறாயினும் சமாதான முயற்சிகளின் பலத்தில் மட்டும் நின்று நிலைக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதனை உறுதியான முறையில் முன்னெடுப்பதால் மட்டுமே அதனால் தொடர்ந்து ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். இம்முயற்சியில் ஏற்படும் தாமதம் அரசாங்கத்துக்கே அதிககேடு விளைவிப்பதாய் அமையும்.

**வேலவன்**

---

2ம்பக்கத்தொடர்ச்சி..

இணங்கமுடியாத தன்மையுடன் தொடரவேண்டும் என்பதில் இறுக்கமாகவும் பிடிவாதமாகவும் இருக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

அவர்கள் பாதிக்கப்பட்ட, போர் திணிக்கப்பட்டு, தற்பாதுகாப்புக்காக முதலிலும் தமது இருப்பையும் அதற்கான தமது உரிமையையும், உறுதிப்படுத்த தொடர்ந்தும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். சமாதானமும் அமைதியும் அவர்களுக்கே மிக அவசியமானதாகும்.

சிறிலங்காவின் ஏனைய பகுதிகளும், மக்களும் போரினால் பாதிப்பிற்குள்ளாகவில்லை என்று சொல்ல வரவில்லை. இது அவர்கள் தேர்ந்தெடுத்த அரசுகள் தனது ஆதிக்க வெறிமூலம் அவர்களுக்கு பெற்றுக் கொடுத்த பரிசேயாகும்.

இந்த சமாதான நகர்வுகளில் 'தீர்வை' உறுதியான நிரந்தரமான தீர்வை நாடி நிற்பவர்கள் தமிழ் மக்கள் மட்டுமே. தமிழ் மக்கள் என்னும் போது தமிழ் பேசும் அனைத்து இன மத- மக்களையும் உள்ளடக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஓராண்டுக்கும் மேலாகத் தொடரும் பேச்சு வார்த்தையில் சமாதானத்திற்காக, அமைதிக்காக ஏங்கும் மக்களுக்கு என்ன விமோசனம் கிடைத்தது என்ற கேள்விக்கு தெளிவான நம்பிக்கையூட்டும் விடை எதுவும் எவரிடமிருந்தும் கிடைப்பதாக இல்லை.

மக்களின் இயல்பு வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது சமாதான போர் நிறுத்த காலத்திலும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயபாதுகாப்புக்கு மட்டும் அக்கறை காட்டும் ஓர் அரசால் ஒரு உறுதியான, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை முன்வைத்து சமாதானத்தை வலுப்படுத்த முடியும் என தமிழ் மக்கள் சந்தேகம் கொள்வதில் நியாயமிருக்கவே செய்கிறது.

பேச்சுவார்த்தை கதைப்பதோடு மட்டும் காலத்தைக் கடத்தும் ஒன்றாகத் தொடர்வதில் தமிழ் மக்களுக்கு விருப்புக்கிடையாது. புனர்வாழ்வு, புனரமைப்பு என்பதெல்லாம் இராணுவ சுற்றிவளைப்புக்குள் முட்கம்பிவளையங்களுக்குள்ளிருந்து வெளிப்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்குள் சாத்தியமே கிடையாது.

மக்களின் இயல்பு வாழ்வுக்கு, சுயாதீன செயற்பாடுகளுக்கு இராணுவப் பிரசன்னம் அச்சுறுத்தலாக மட்டுமே இருக்க முடியும்.

தமிழ் மக்களின் உரிமைகள்-இயல்பு வாழ்க்கை தொடர்பாக ஏற்கெனவே பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை நிறைவேற்ற ஏன் அரசு தாமதிக்க வேண்டும்?

அதை நிறைவேற்றுமாறு ஏன் அரசை சமாதானப் பேச்சுக்களைத் தொடருமாறு கூறும் சக்திகள் நிர்ப்பந்திக்கவில்லை?

அரசுக்கு நிதியை அள்ளிக் கொடுக்க முன்வரும் நாடுகள் ஏன் தமிழ் மக்களுக் கான 'நீதி'யை பெற்றுக்கொடுக்க பின்னடிக்கிறார்கள்?

சிறிலங்காவுக்கு 'நிதி' அவசியம் தேவைப்படலாம். ஆனால் எமது மக்களுக்கான உரிமைகள் தொடர்பாக 'நீதி கிடைக்காத விடத்து பேச்சுவார்த்தை மேசைகள், மாநாட்டு நிகழ்வுகள் போன்றவற்றில் வெறுமனே போய் உட்கார்ந்து சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்தும் தேவை சாதாரண அரசியல் வாதிகளுக்கு இருக்கலாம்.

ஆனால் மக்களுக்காகவே போராடி, மக்களுக்காகவே சமாதானப்பேச்சுவார்த்தைகளிலும் தம்மை இணைத்துக் கொண்ட விடுதலைப்புலிகளுக்கு அதுதேவையில்லை....

ஏனென்றால் தமிழ் மக்கள் தமது விடிவுக்கும், விடுதலைக்கும் விடுதலைப்புலிகளையே நம்பியுள்ளார்கள் என்பதனாலேயாம்....

இதனைச் சமாதான ஏற்பாட்டாளர்களும்- சர்வதேச அமைதி ஆர்வலர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

சமாதானம் மூலம் தமிழ் மக்களுக்கு தேவையானது 'நீதி' மட்டுமே... வெறுமனே 'நிதி' யல்ல....

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -19



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -19

....................................................................................

....................................................................................

....................................................................................

....................................................................................

பெயர் : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 18




**அழகரத்தினம் ஜீவிதா**
**பெரியபளை**
**பளை**

### பரிசுக்குரிய வரிகள்

**மாளிகையே நீ மன்னனின் வதிவிடம்-இந்த**
**மதி கெட்டமாந்தரினால் உன்வேந்து அழிந்திட்டான்**
**உன்னைப் பராமரிக்க யார் வருவார்-என**
**நீ உன் வாசல் கதவினை திறந்திருக்கிறாயா?**

### பாராட்டுக்குரிய வரிகள்

*யாழ்ப்பாணத்தின் அகழ் விளக்கே!*
*பாழ் போனாய் பகைவர்களால்*
*பழிமறைக்க முயல்கின்றார்*
*ஆனாலும் எம்மினத்தின் மாறாத சுவடாய்...*

செ.நேசன்
சோதனை நிலையம்
புளியங்குளம்

*கோபுரங்களின் உச்சியில் உன் வசந்தம் அன்று*
*கால்நீட்டிப்படுக்க வீடற்ற எம்அவலம் இன்று*
*பத்தடித்தறப்பாளில் எம்வாழ்க்கைச் சுவடுகள்*
*நித்தமும் பட்டினிப்பிடியில் எம் உறவுகள்*

நா. அலைவாசகி
இல:42,நாவலர்வீதி,
பண்டாரிக்குளம் வவுனியா.

*அழிந்து போய்விடுமோ எமை ஆண்டோரின் கருவூலம்*
*காப்பாற்றுவோம் வாருங்கள்.*
*அதன்வாசல் என்றும் திறந்திருக்கிறது, அதற்காக.*

ரதி
வவுனியா

*இனி எப்போது என்வாசலில் சபை கூடும்*
*எப்போது என்மன்னவன் ஊர் திரும்புவான்*
*எப்போது என்பிள்ளைகள் எனையாளும்*
*மந்திரி மாளிகை நான்.*

ச.ரமேஸ்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

# டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த [தனியார்] மருத்துவமனை
# Dr.Ponnampalam Memorial (PVT) Hospital

யாழ் சாலை
கிளிநொச்சி.

இரணைப்பாலை வீதி
புதுக்குடியிருப்பு.

## உங்கள் நலன் கருதி



- பற்சிகிச்சை வசதிகள்
- 24 மணிநேர வெளிநோயாளர் சேவை
- உள்நோயாளர் விடுதிகள்
- நவீன ஆய்வுகூட வசதிகள்
- **X-ray** வசதிகள்
- ஸ்கானிங் (Scaning)வசதிகள்
- விசேட வைத்திய ஆலோசனைகள்
- சத்திரசிகிச்சைக்கூட வசதிகள்
- விசேட கருவி மூலமான கொலஸ்ரோல் Lipid, provle, Blood ,குளுக்கோஸ் போன்ற சகல விதமான இரத்தப் பரிசோதனைகள்
- சகல விதமான சிறுநீர்ப்பரிசோதனைகள்





மேற்கொள்ளக்கூடிய சிறந்த
வைத்தியசாலை ஆய்வுகூட
வசதிகள் என்பவற்றை





## ஒரே
## இடத்தின் கீழ்
## விரைவாக
## பெற்றுக்கொள்ள
## நாடுங்கள்.



# டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த [தனியார்] மருத்துவமனை
# Dr.Ponnampalam Memorial (PVT) Hospital

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.